# மனிதம்

## கவிதை நூல்





நூலாசிரியர்
கவிஞர், கலைஞர், கூத்தாடி வி.சி. குஞ்சிதபாதம்

## மூளாய்
## வேம்படியாள் விநாயகன்



# தூயவளே துதிக்கின்றோம்!



## திருமதி மகேஸ்வரி குஞ்சிதபாதம்

அன்பை அடி நாதமாக
அவனிதனில் எமக் களித்து
துன்பச் சுமை துணித்த
தூயவளே துதிக்கின்றோம் !

சுண்டிக்குழி
யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்

தலைப்பு :- மனிதம் கவிதை நூல்

பதிப்புரிமை :- ஆசிரியருக்கே

ஆக்கம் :- கூத்தாடி வி.சி. குஞ்சிதபாதம்

வெளியீடு :- திரு. மா.ஞானேஸ்வரன், பொறியியலாளர்

பக்கங்கள் :- 82

பதிப்பு :- ஆடி 2014

பதிப்பகம் :- சாய்ராம் பிறிண்டேர்ஸ், சங்கானை, யாழ்ப்பாணம்.
021 2251155, 077 6915339

## மனிதத்துள்.......

கடந்த 05.09.2012ல் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை முதியோர் இல்லத்தில் ஓர் உறுப்பினராக உள்வாங்கப்பட்டேன். அந்தநாள் முதல் இவ் வளாகத்தில் ஓர் ஆலயம் இல்லாத குறை என்னுள்ளத்தில் வெறுமை உணர்வைத் தோற்றுவித்தது. அதன் பலன் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர். ப. நந்தகுமார் அவர்களை அணுகி என் விருப்பினை வெளியிட்டேன். என்னைச் செவிமடுத்த டாக்டர் அவர்கள், என் கோரிக்கையில் பொதிந்திருந்த பொருளை அறிந்துகொண்டார். உடனடியாகவே தலைவர் திரு.மா.ஞானேஸ்வரன் அவர்களைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு என் வேண்டுதலை விளக்கினார். அதன் பலன் ஆலயம் அமைக்கும் பணி ஆரம்பமானது. பெருந்தகைகளிடமிருந்து இக் கைங்கரியத்துக்கென நன்கொடையாகக் கிடைக்கப்பெற்ற பணத்தைக் கொண்டு விநாயகராலயத்தின் மூலஸ்தான வேலை முடுக்கிவிடப்பட்டது.

01.11.2013ல் கோயில் கும்பாபிஷேகம் இனிதே இடம்பெற்று வழிபாடுகள் தொடர்கின்றன. தினமும் காலையும் மாலையும் பக்தர்களால் பிரார்த்தனைப் பாடல்கள் இசைக்கப்படுவது இவ்வாலயத்தின் சிறப்பை மென்மேலும் மெருகூட்டுவதாக அமைந்துள்ளது.

இவ்வாலயத்தில் பள்ளிகொண்டு பக்தர்களுக்கு அருளை அள்ளி வழங்கிவரும் வேம்படியாள் விநாயகரைப்பற்றிக் கவிதை நூலொன்றை வெளியிடவேண்டுமென்ற விருப்பை இவ் வைத்தியசாலையில் பணியாற்றிவரும் செல்வன் த. திருச்செந்தூரன் என் மனதில் விதைத்தார். அதன் பலனாக மலர்ந்தது தான் "மனிதம்" எனும் இக் கவிதை நூல்.

இந்நூலை வெளியிட ஆக்கமும், ஊக்கமும், ஒத்துழைப்பும் நல்கிய மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைத் தலைவர் உயர்திரு மா. ஞானேஸ்வரன், உபதலைவர் உயர்திரு வி. வேலுப்பிள்ளை, கௌரவ செயலாளர் திரு க. செல்வராசா, பொருளாளர் திரு அ. கிருஸ்ணமூர்த்தி, நிருவாக உத்தியோகஸ்தர் திரு சி. விக்னேஸ்வரராஜா ஆகியோருட்பட அனைத்துப் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், வைத்தியசாலையில் பணியாற்றி வரும் வைத்தியப் பெருந்தகைகள், பணியாளர்கள், முதியோரில்ல உறுப்பினர்கள், உதவியாளர்கள் ஆதியாம் அன்பிதயம் படைத்த பண்பாளர்களுக்கும், படப்பிடிப்பாளர் திரு க. சிவபாதம் அவர்களுட்பட ஏனைய உதவிக்கரங்கள் நீட்டும் உத்தமர்களுக்கும் என் இதய பூர்வமான நன்றியறிதல்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இதழ்களாக வழங்கிய என் ஆக்கங்களை துரித கதியில் திறம்பட வடிவமைத்து மணம் வீசும் மலர்களாயீந்த சங்கானை, சாய்ராம் பிறிண்டர்ஸ் நிறுவன அதிபர் திரு த. ததீஸ்வரன் அவர்களுக்கும், நிறுவன ஊழியர்களுக்கும் என் இனிய நன்றிகள்.

நிறைவாக, தோன்றாத் துணையாய் நின்று எம்மை வழிநடாத்தி வரும் வேம்படியாள் விநாயகரின் பாராத விந்தங்களில் எனது 'மனிதம்' கவிதை நூலைச் சமர்ப்பித்து அவனருள் வேண்டி அமைகின்றேன்.

நன்றி.
அன்புடன்
கூத்தாடி வி.சி. குஞ்சிதபாதம்

## – மனிதத்துள் மலர்பவை–

1. தேப்பமெனக் காத்திடப்பா !
2. மீளவழி காட்டிடையா !
3. மூளாய்ப் பதியினை நாடுங்கடி !
4. குவலயத்தில் வாழ வைப்பாய்!
5. புற்றிடுவாய் எம் கரத்தை !
6. சாந்தியையீந்திடையா
7. அன்பே சதம்
8. பக்குவத்தைத் தந்திடையா !
9. சுமைதாங்கும் சூத்திரன்
10. பேராற்றல் ஈபவனே
11. சஞ்சலங்கள் துஞ்சிவிடும்
12. பிணிகளையும் பெருமருந்து
13. அன்பு மழை அகிலமெலாம் பொழிய வேண்டும்!
14. கரிமுகனே! கடைக்கண்ணால் பார்த்திடாயோ !
15. சூட்சுமத்தைத் தந்திடுவாய்
16. சந்ததம் எம்மைக் காக்கும் !
17. தூயவை துலங்கவேண்டும் !
18. பெட்புடனாற்றல் தாராய் !
19. பக்குவத்தைத் தந்திடையா !
20. துயர் துடைக்கும் தூயவனே !
21. தஞ்சம் அடைந்தோர்க்குத் தக்கவழி காட்டிடையா !
22. வித்தையினை நித்திலமாய் இத்தரையி லீந்திடுவாய் !
23. மூளாய்த் திருத்தலம் நாடுங்கடி !
24. காசினியே தேசுபெறும் !
25. தொல்லை துடைத்தகற்றித் தூயவழி காட்டிடையா !
26. சித்தமதைச் சிதறாது காப்பாயப்பா !
27. நனிசிறந்து வாழட்டும் !
28. முத்தி தரும் மூலவன்
29. நீளுலகை நிறுத்திடையா !
30. தூமணியே துலங்கவைப்பாய் !
31. ஏழிசையாய் இசைப்பயனாய் ----

32. மலையாகக் காக்குதையா !

33. மடைதிறந்து அன்புலகில் நீளவேண்டும் !

34. மருவிப் பேரின்பம் தாராய் !

35. ஈகை இலங்கிட நின்றிடுவாய் !

36. உள்ளம் உயர்த்திட வந்திடப்பா !

37. திவ்வியத்தைத் தந்திடையா!

38. நஞ்சுணி மைந்தா உந்தன் ----

39. நஞ்சுணி மைந்தா உந்தன்..........

40. தேக்கநிலை நீக்கிடப்பா ----

41. சீத்துவமாய்த் தந்திடையா!

42. புதுக்கிடும் பு[illegible]கும் கண்டேன்

43. நனி சிறந்தோங்க வைப்பாய் !

44. இனிமை ... ந்திடப்பா !

45. நீதம் நிலைபெறத் தந்திடையா !

46. கோலம் அளித்திடையா !

47. வளமீயும் வாரணனே !

48. கூனல் நிமிரட்டும்

49. கலைஞானக் கருவுருவே !

50. வள்ளலுனை வழுத்துகிறோம்

51. கேண்மை கொழிக்கிறது

52. சஞ்சலங்கள் துஞ்சிவிடும் !

53. வளமீயும் பக்தியலை

54. தெவிட்டாத சொல்லுழவன்

55. அறிவைப் பெருக்கிடையா !

56. பகைமை பறித்திட வந்தனனே !

57. வழித்துணையாய் வந்திடப்பா !

58. உயர்வினைக் கண்டோமையா !

59. பாலைப் பழிக்குமுந்தன் பக்குவம் கண்டோமையா !

60. நீயின்றி வேறுளரோ ?

61. செதுக்கிடுவாய் உன்னுளத்தை

62. தலைவனிடம் விட்டு விடு

63. தூக்கி நிறுத்திடப்பா !

# கவித்துவக் கலைஞர்



யாழ் சுண்டிக்குளியில் அன்னம் செல்லையா இணைந்த கலைக் குடும்பத்தில் ஐந்தாவது பிள்ளையாகப் பிறந்து. யாழ் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியையும், பின்னர் யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கல்வி பயின்றவர், எம் கவிஞர் கூத்தாடி வி.சி. குஞ்சிதபாதம் அவர்கள்.

எடுத்த காரியத்தைத் தொடுத்து முடிப்பதில் வல்லவரான கவிஞர் அவர்கள் தமது பன்னிரண்டாவது வயதிலேயே கவிதைத்துறையிலும், நாடகத்துறையிலும் காலடி எடுத்து வைத்தார். தமது இருபதாவது வயதில் இவரின் சகோதரர்களான நாடகக் கலாமணி வி.சி.பரமானந்தம், ஆசிரியர் திரு.வி.சி.நமசிவாயம் ஆகியோரின் தலைமைத்துவத்தின் கீழ் இயங்கி வந்த சுண்டுக்குழி யாழ் நாடகக் கலாமன்றத்தின் செயலாளர் பொறுப்பை ஏற்றார். இவரின் மைத்துனரான நாடக மாமணி சி.கனகையா அவர்களின் பங்களிப்பும், நாடக மன்றத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியது.

நாடகத் துறையில் கொண்ட பெரு விருப்புக் காரணமாக இருபத்தொரு வருட கால அரச சேவையுடன் இளைப்பாறிய அவர் 48 நாடகங்களை நெறிப்படுத்தியதுடன் நாடகங்களில் நடித்த வருமாவார்.

ஈழத்தில் தமிழர் வாழும் இடங்களிளெல்லாம் நாலாயிரத்துக்கும் மேற்பட்ட மேடைகளில் நடித்த இக்கலைஞர், மன்றத்தின் 29 வது படைப்பான புகழ்பூத்த "அடங்காப்பிடாரி " எனும் 1338 மேடைகளிலேறிய முழுநீள நகைச்சுவை நாடகத்தை நெறிப்படுத்தி யதுடன் முக்கிய பாத்திரத்தையும் ஏற்று நடித்துள்ளார். நாடகங்களுக்குரிய பாடல்களை எழுதும் வல்லமை கொண்ட இவர் இன்று எமது மூளாயம்பதியில் எழுந்தருளியிருக்கும் வேம்படியாள் விநாயகரைப் பற்றியதோர் கவிதை நூலை "மனிதம்" எனும் மகுடத்தின் கீழ் எழுதி வெளியிடும் பாங்கு பாராட்டுக்குரியதே.

கவிஞர், கவிஞர், கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம் அவர்கள் மூளாய் வைத்தியசாலை வளாகத்தில் அமைந்திருக்கும் முதியோரில்லத்தில் வாழ்ந்து அனைவரையும் ஆன்மீகத் துறையில் அழைத்துச் செல்லும் பக்குவம் எமக்குப் பெருமையையும், பேரானந்தத்தையும் தருகிறது.

இவருக்கு நீண்ட ஆயுளையும், ஆசியையும், வழங்க வேண்டுமென வேம்படியாள் விநாயகரை வேண்டி விடை கொள்கின்றேன்.

வாழ்க மனிதம் ! வளர்க புனிதம் !!

மா.ஞானேஸ்வரன்,பொறியலாளர்,
தலைவர், " மனிதம்" விழாக்குழு,
தலைவர்,கூட்டுறவு வைத்தியசாலை,
மூளாய்.

# முத்தான மூத்தவர் முத்தமிழ்க் கலைஞர் குஞ்சித பாதம் ஐயா நமக்களித்த முதுசொம்



"என்னை நன்றாகப் படைத்தனன் இறைவன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"

என்பது ஒப்புயர் வற்ற ஆன்மீகக் கருவூலத்தை நமக்களித்த திருமூலரின் வாக்கு. இந்த உன்னத வாக்குக்கு உயிரோட்டம் அளித்து வாழ்ந்து கொண்டிருக்கும் எம் முத்தான மூத்தவர்களில் தலையாய ஒருவராக இந்த அரிய இறைநெறியும், அறநெறியும் ஒருங்கமைந்த கவிதைநூலை நமக்களித்த வி.சி. குஞ்சிதபாதம் ஐயா திகழ்கின்றார் என்றால் அது மிகையாகாது.

அன்னம் செல்லையா தம்பதியரின் மகனாக 04.09.1938 ல் சுண்டிக்குழியில் பிறந்த ஐயா அவர்கள் ஓர் அரச உத்தியோகத்தராக தலைமை எழுதுவினைஞர் எனும் தனது பணிக் கூற்றுக்கு அப்பால் ஈழத் தழிழர்களின் நாடக மேதையாக கடந்த பல சகாப்தங்களாகத் திகழ்ந்தார். கூத ... எனப் புனகாங்கிதம் அடையும் பெருமை விரும்பாத பட்டங்களை நாடி அலையாத ஐயா அவர்களின் நெறியாள்கையில் 1300 க்கு மேற்பட்ட மேடை களைக் கண்ட 'அடங்காப்பிடாரி" முழு நீள நகைச்சுவை நாடகம் காலத்தால் அழியாத பதிவாக இன்றும் மூத்தோர் மனதில் குடிகொண்டிருக்கின்ற செய்தி ஓர் கலைஞனுக்குக் கிடைத்திருக்கின்ற உன்னத சமூக அங்கீகாரமாகும்.

கடந்த சில வருடங்களாக தனது ஓய்வு காலத்தை மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் மூத்தோர் இல்லத்தில் கழித்து வருகின்ற ஐயா அவர்கள் இந்த ஆசியாவின் பழம்பெரும் கூட்டுறவு வைத்தியசாலைக்கு ஆன்மீகத்தின் ஆற்றுகை மையத்தை ஏற்படுத்திக் கொடுத்த பெருமகனாராக விளங்கின்றார். ஆம் பல இலட்சம் நோயாளர்களின் உடல் வலிகளுக்கு நிவாரணம் வழங்கிவரும் இந்த வைத்தியசாலையில் அவர்களின் ஆன்ம உணர்வுகளுக்கு மனச் சாந்திக்கு வழி சமைக்கும் வகையில் தன் எண்ணத்திலுதித்த விநாயகப் பெருமான் ஆலயத்தை வைத்தியாசாலைச் சபையினரைக் கொண்டு குறுகிய காலத்தில் செயலுருக் கொடுத்து இன்று அந்த வேம்படியாள் விநாயகப் பெருமானின் பெயராலேயே இவ்வரிய கவிதைத் தொகுப்பை யாத்து அளித்து இருக்கும் அருஞ்செயல் அடுத்த தலைமுறைக்கு சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்கின்றது.

மனிதம் காக்கும் புனித தெய்வீக சிந்தனையாக எம் அமிழ்தினும் இனிய தாய்மொழியாம் தமிழில் தொன்நெறியாகிய சிவநெறி மரபோடு ஐயா அவர்கள் தந்திருக்கும் இந்த அரிய அருட்பாக்கள் அடங்கிய கவிதைநூல் காலத்தால் அழியாது எமது சமூகத்துக்குப் பலனளிக்க "அன்பே சிவமாய்" அமர்ந்திருக்கும் இறை சிவனை வேண்டி ஐயாவினை வாழ்த்தி வணங்கி நிற்கின்றோம்.

ஐயாவின் அன்புக்குரிய
மருத்துவர்,
ப. நந்குமார்.

## வாழ்த்துரை



**எல்லாம் வல்ல வேழமுகத்தான் திருவருளால் கலைஞர் கூத்தாடி வி.சி. குஞ்சிதபாதம் அவர்களால் "மனிதம்" எனும் நூல் வெளிவருவதையிட்டு மனமகிழ்ச்சியடைகின்றேன்**

இவர் புகழ் பெற்ற இசை நாடகக் கலைஞரான செல்லையா அன்னம் தம்பதிகளின் தவப்புதல்வராவர் வளரும் பயிரை முளையில் தெரியும் என்பதற்கிணங்க இவர் தனது பள்ளிப்பராயத்திலேயே பல பேச்சு, கவிதைப் போட்டிகளில் பங்கு பற்றிவந்துள்ளார். தனது பன்னிரண்டாவது வயதிலேயே எழுத்துத் துறையில் ஈடுபட்டு வீரகேசரி, ஈழநாடு, உதயன் போன்ற பத்திரிகைகளில் கூத்தாடி எனும் புனைப் பெயரில் தொடர்ச்சியாகக் கவிதைகள் எழுதி வந்துள்ளார்.

இவர் நாலாயிரத்துக்கும் மேற்பட்ட மேடைகளில் தேவைப்பட்ட பாத்திரங்களில் நடித்துப் புகழ்பெற்ற நடிகராகவும் ஐந்நூற்று ஐம்பதிற்கும் மேற்பட்ட தலைப்புகளில் கவிதைகளை எழுதியிருக்கும் ஒப்பற்ற கவிஞராகவும் கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக கலைப்பணியாற்றி வருகின்றார்.

இவர் தெளிவான தமிழறிவும் இசைஞானமும் கொண்டவராக, தற்பெருமையற்ற பண்பாளனாகவும் விளங்குகின்றார். அன்பு, பண்பு, அறிவு, எதையும் அறிய வேண்டுமென்ற மனப்பாங்கு, விழுமியம் பயக்கும் நல்ல சிந்தனை, ஆய்வுக் கண்ணோட்டம், படைப்பாற்றல் அவற்றைத் தொகுத்தல் போன்ற அரிய செயல்களுக்கு இருப்பிடமாகத் திகழ்பவர் அன்பர் குஞ்சிதபாதம் அவர்கள் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் முதியோர் பராமரிப்பு பகுதியில் கடந்த சில வருடங்களாக வாழ்ந்து வரும் அன்பர் வி.சி.குஞ்சிதபாதம் அவர்கள் வைத்தியசாலை வளாகச் சமூக நலனில் ஈடுபாடு உடையவராகத் திகழ்ந்து அவ் வளாகத்தினுள் ஆன்மீகச் சூழலையும் உருவாக்க வேண்டும் என்ற நல் எண்ணத்தோடு அங்கு விக்கினங்களைத் தீர்க்கும் விநாயகப்பெருமானின் ஆலயமொன்றை அமைப்பதற்குக் காரணகர்த்தாவாக விளங்கினார்

விநாயகப் பெருமான் மீது கொண்ட அளவற்ற பக்தி காரணமாக அவர் மீது கவிதைகள் இயற்றி அவற்றை நூலுருவில் வெளியிடுகின்றார்.

இவர் சமயப்பணியும், இறைதொண்டும் தொடர்ந்து ஆற்ற தேகாரோக்கியத்தையும், மனோதிடத்தையும் நீண்ட ஆயுளையும் அவருக்கு வழங்க வேண்டுமென எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை வேண்டுகின்றேன்.

**அரிமா.வி.வேலுப்பிள்ளை J.P (WI)**
**ஓய்வு நிலை மின் பொறியியலாளர்**

# மனிதம் மலரட்டும்

யாழ் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை முதியோரில்லத்தில் வதியும் திரு.வி.சி.குஞ்சிதபாதம் அவர்களால் அவரின் காலஞ்சென்ற துணைவியாரின் நினைவாக வெளியிடப்படும் "மனிதம் " எனும் கவிதை நூலை வெளியிட வேண்டும் எனமுன்வைக்கப்பட்ட ஆக்கபூர்வமான சிந்தனை பாரியதொரு வளர்ச்சியாகும்.

இவரது இவ்வாக்கமானது இவரது துணைவியாரின் ஆத்ம சாந்தி பெற, மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை வளவினுள் இவரின் பெருமுயற்சியால் அமைக்கப்பெற்ற கோவிலில் பள்ளி கொண்டருளும் விநாயகப் பெருமான் அருள் புரிவார் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

'மாதா பிதா குரு தெய்வம் " மாதா, பிதாவை அடையாளம் காட்டுகின்றாள். பிதா,குருவை அடையாளம் காட்டுகின்றார். குரு தெய்வத்தைத் தெரிய வைக்கிறார். ஆகவே கல்வி என்பது இங்கு தெய்வத்துக்கு ஈடாகின்றது.

முாறிக் கொண்டு வரும் உலகத்தோடு நாமும் ஒட்ட ஒழுகுகின்றோமா? இல்லையா? என்பதை உணர்த்துவன இத்தகைய நூல்களே. பிறந்து, வாழ்ந்து, மடியும் மனிதன் இறவா வரம் பெறுவது தன் படைபாற்றலால் படைக்கும் சாதனைகள் மூலமே, அவ்வாறானதொரு நிகழ்கால சமூகத்தை எதிர் காலத்துக்கு இட்டுச் செல்லும் பணியைச் செய்ததமையையிட்டு நாம் பெரிதும் பெருமைப்படுகின்றோம்.

**டாக்டர். செல்வி ந. ஆறுமுகம்.**



## ஆசியுரை



வரலாற்றுக் காலத்திற்கு முந்திய இதிகாச காலத்துப் பழம் பெருமை வாய்ந்த இலங்கைத் தீவின் வடபாலமைந்த யாழ்ப்பாணம் சிரம்போல் அமைந்து சீரிய முறையில் சிறப்பும் மேன்மையும் பொருந்தியுள்ளதாகும். யாழ்ப்பாணத்துச் செந்தமிழும், சிவநெறியும் செழித்து வளர்ந்த தலங்களுள் "மூளாய்" முன்னணியில் நிறை பெருமையும், ஏற்றமும் பொருந்தியதாகும். நீர் வளமும், நிலவளமும் சீர் செறிந்த இப் புண்ணிய பூமியில் ஆசியாக் கண்டஹத்தில் கூட்டுறவுத் துறைக்கு பெருமை தேடித்தந்த "மூளாய் கூட்டுறவு வைத்திய சாலையில்" கோவில் கொள்ளும் பொருட்டு அடியார்களுக்கும், நோயுற்றோர், முதியோர், நலிவுற்றோர், அருள்பாலிக்கும் பொருட்டு 01.11.2013 ம் திகதி புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட "திருவருள் மிகு வேம்படி (ஆ)யாழ் விநாயகப்பெருமான் ஆலயம் "அமைந்த வைத்தியசாலை வரலாற்றில் ஓர் சிறப்பு மிக்க ஓர் மைல்கல்லாகும்.

இத்திருப்பணிக் கைங்கரியத்திலும் கும்பாபிஷேகத்தின் போதும், இம்மலரினை அழமுதற வெளியிடுவதில் ஈடுபட்ட அடியார்கள் அனைவருக்கும் தன்னை நாடிவரும் அனைவருக்கும் சகல நலங்களும் பெற்று, மண்ணில் நல்ல வண்ணம் வாழத் திருவருள் கைகூடுவதற்கு எம் பெருமானின் திருவடிகளைப் போற்றி இறைஞ்சுகின்றோம்.

செல்வராசா J.P. (W.I)
செயலாளர்
கூட்டுறவு வைத்தியசாலை
மூளாய்
ஓய்வுநிலை பொதுச் சுகாதார
வெளிக்கள உத்தியோகத்தர்

# அரும்பெரும் கலைஞனின் அயரா முயற்சிக்கு ஆசிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.



முத்தமிழின் முக்கியமானதொன்றான நாடகத்துறை பேரோடும், புகழோடும் வாழ்வதற்குக் காரணமாக இருந்த கிராமங்களிலே யாழ்ப்பாணத்தை தலைமையகமாகக் கொண்ட சுண்டிக்குளிக் கிராமம் மிக முக்கியமானதோர் கிராமமாகும். அங்கே வாழ்ந்தவர்கள் ஏதோவொரு வகையிலே நாடக எழுத்தாளர்களாக அல்லது நடிகர்களாக அல்லது அண்ணாவியார்களாக நாடகத்துறைக்கு மிகப்பெரும் பங்காற்றியுள்ளார்கள். அந்த வகையிலே அக்கிராமத்திலே பிறந்து கல்வி கற்று அரச சேவையாற்றி அத்தோடு நாடகத்துறைக்குத் தன்னை அர்ப்பணித்த ஒருவர் தான் திரு.குஞ்சிதபாதம் ஐயா அவர்கள். அவர் மூளாய் கூட்டுறவு வைத்திய சாலையின் முதியோர் பகுதியிலே வந்து வாழக் கிடைத்தது எமக்கெல்லாம் பெருமை தரும் ஓர் விடயமாகும். அனேகமாக மிகப் பெரும் கலைஞர் களெல்லாம் தமது வயோதிபத்திலே மூளாய்க் கிராமத்திலே வந்து வாழக் கிடைப்பது மூளாயின் சிறப்பா அல்லது கலைஞர்களின் சிறப்பா என்று நான் கேட்ட போது அதற்கு அது மூளாயின் சிறப்பேயாகும் என்று திரு.குஞ்சிதபாதம் ஐயா அவர்களே பதில் கூறியிருக்கின்றார். அத்தகையதோர் பெருந்தகையின் பெருமுயற்சியால் இப்போது மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் வளாகத்துள்ளே ஓர் அற்புத சக்தியாக எல்லாம் வல்ல சித்திவிநாயகப் பெருமானது கோயில் மிகவும் அற்புதமாகத் தோற்ற மளித்திருக்கின்றது. அது மட்டுமல்லாமல் இப்போது அந்தப் பரம்பொருளின் பெரும்புகழைக் கலைஞர் குஞ்சிதபாதம் ஐயா அவர்களே சிறப்புப் பாடல்களாக யாத்து கூட்டுறவு வைத்தியசாலை விநாயகப் பெருமானாகிய வேப்ப மரத்தடி விநாயகப் பெருமானாகிய பரம்பொருளின் தாரக மந்திரமான “மனிதம் மலரட்டும் புனிதம் பொலியட்டும்” என்ற மந்திரத்தின் “மனிதம்” என்கின்ற பதம் கவிதை நூலாக வெளிவருதல் கண்டு பெருமகிழ்ச்சி அடைவதோடு அவருடைய இப் பெருமுயற்சி நாம் பெரிதும் விரும்புகின்ற மனிதத்தைக் காணவேண்டுமென்றும் அவருக்கு எல்லாம் வல்ல விநாயகப் பெருமானது கிருபை எப்போதும் கிட்ட வேண்டுமெனவும் பிரார்த்தித்து ஆசிகூறுகின்றேன்.

**நன்றியுடன்**

**“ஆசுகவி”**

**செ.சிவசுப்பிரமணியம்**

## மண்ணின் மைந்தன்



யாழ் மண்ணின் மைந்தனாக சுண்டுக்குழி என்னும் ஊரில் அவதரித்த எமது நூலாசிரியர் கவிஞர் கூத்தாடி வி.சி. குஞ்சிதபாதம் ஐயா அவர்கள் படைத்த "மனிதம்" என்னும் நூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்க என் கைகளுக்கு வரப்பிரசாதம் பெற்றதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக" என்னும் மகுட வாசகத்திற்கிணங்க வையத்தில் வந்துதித்த வெய்யோனே இம்மாமனிதர் வீறு கொண்ட நடை. நேர்கொண்ட பார்வை. அஞ்சா நெஞ்சம் அத்துடன் அமைதியான பேச்சு. இவரின் நாடகமென்றால் நாடே அதிரும். வைத்தகண் வாங்காமல் பார்க்கும் வகையில் நாடகத்தை நெறிப்படுத்தும் சிறந்த நெறியாளன். உள்ளத்துணர்வுகளை உள்ளதை உள்ளவாறு கூறிக்கொள்ளும் உயரிய பெருமைக்குரியவர். தேவையுடையோரைத் தேடிச்சென்று தேற்றி நிற்கும் பாதங்கள் இவருடையது என்று சொல்வதில் மிகையாகாது.

"சிறக்கட்டும் அவர் பணி, தொடரட்டும் இவர் சேவை" பல்லாண்டு காலம் பல்கலையும் பெற்று மக்கள் மனதில் மங்காத் திரியாய் மகிழ்வுடன் மிளிர மனமார வாழ்த்துகிறேன்.

அன்புடன்
மு.டு.பேணடேற்
பிரதம தாதி
மூளாய் கூட்டுறவு
வைத்தியசாலை

# மனிதத்துள் புனிதம்




சைவமும் தமிழும் தழைத்தோங்கும் மூளாயாம் பதியினிலே கூட்டுறவு வைத்தியசாலையும் முதியோர் இல்லமும் நடாத்தப்பட்டு வருகின்றது. இந்த முதியோர் இல்லத்தில் வாழ்ந்து வரும் திருவாளர்.கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம் அவர்கள் இந்த வைத்தியசாலை வாளாகத்தினுள் ஒரு ஆலயம் அமைக்க வேண்டும் என்று அவாக்கொண்டு தனது அயராத உழைப்பினால் பக்தர்களால் வழங்கப்பட்ட நன் கொடை மூலம் ஆலயத்தை சிறந்த முறையில் அமைப்பித்துள்ளார். ஆந்த ஆலயத்தில் எழுந்தருளி இருக்கும் விநாயகப் பெருமானின் பெருமைகளைக் கூறும் "மனிதம்" என்னும் நூலை ஆக்கி, மக்களின் மனதைப் புனிதமாக்கிய பெருமையைப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

எல்லாம் வல்ல வேம்படியாள் விநாயகனின் அருளாசியால் நாடும் வீடும் நனி சிறக்க வேண்டுமென வாழ்த்துவதில் பேரானந்தம் அடைகிறேன்.

**திருமதி.பரமேஸ்வரி தவராசா**
**"தாதியர் சகோதரி"**
**மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை**

# மலரும் மனிதம்



நூலாசிரியர் கவிஞர் கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம் ஐயாவின் "மனிதம்" கவிதை நூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

யாழ் சுண்டுக்குழியில், பிறந்து, அரச துறையில் பொறுப்பான பதவி வகித்து, சாவகச்சேரியில் உத்தம குடும்பத்தில் பத்தினியைத் தேர்ந்தெடுத்து இல்லற வாழ்வில், நன் மக்களைப் பெற்றுப் பெருமை கொண்டவர் எம் கவிஞர் ஐயா அவர்கள்

நாலாயிரத்துக்கும் மேற்பட்ட தடவைகள் நாடகங்களை ஈழத்தில் தமிழர் வாழும் இடங்களிலெல்லாம் மேடையேற்றிய இவரின் சுண்டிக்குழி யாழ் நாடகக் கலாமன்றத்தின் அதியுயர் தயாரிப்பான "அடங்காப்பிடாரி" என்னும் சிந்திக்கவும் சிரிக்கவும் வைதத சமூக சீர்திருத்த நகைச்சுவை நாடகத்தை, ஆசிரியர் நாடகக் கலாமணி வி.சி. பரமானந்தம் அவர்களின் எண்ணக் கருவிலிருந்து எள்ளளவும் வழுவாது நெறிப்படுத்தி 1338 தடவைகள் மேடையேற்றிய பெருமைக்குரியவர் நம் கவிஞர் ஐயா அவர்கள் நாடகங்களில் காதல், வீரம், சோகம், அதிர்ச்சி ஆகிய அனைத்துவகை ரசனைகளையும் அணுவும் பிசகாது எடுத்தாளும் பெற்றி ஐயா அவர்களுக்குக் கைவந்த கலை .

கவிஞர் ஐயா அவர்கள் தம் முதுமையை மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை முதியோர் இல்லத்தில் கழித்துவரும் காலை, இவ்வளாகத்தில் ஓர் ஆலயத்தை அமைப்பதற்கு ஊன்றுகோலாக நின்று செயற்பட்டு வருகின்றார். இவரின் கவித்துவம், கலைத்துவம், தமிழ்மொழிப் பற்று ஆகியவை இவருடன் நின்றுவிடாது இவரின் வாரிசுகளும் தொடர வழிசமைத்து நீடுழி காலம் வாழ அருள் பாலிக்க வேண்டுமென எல்லாம் வல்ல வேம்படியாள் விநாயகரை வேண்டி நிற்கின்றேன்.

**அன்புடன்**
**சி.விக்னேஸ்வரராஜா**
**நிர்வாக உத்தியோகத்தர்**
**கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம்**
**மூளாய்.**

# வினை தீர்க்கும் விநாயகர்



இயற்கை வளம் கொழிக்கும் மூளாய்ப் பதியில் வேம்படியாள் விநாயகர் வீற்றிருந்து அருள்பாலித்துக்கொண்டிருக்கிறார். வேரோடு வினை தீர்க்கும் விநாயகப்பெருமானை வழிபடும் அன்பர்கள் பூர்வஜென்ம புண்ணியம் செய்தவர்களாவர். எப்பொழுதும் சந்தோசத்தையும் ஆரோக்கியத்தையும் விரும்பும் மக்களுக்கு அவற்றையெல்லாம் விநாயகர் அள்ளி வழங்கிக் கொண்டிருக்கிறார்.

இசை மனதை இசைவிக்கும் வல்லமை வாய்ந்தது. இதனாலேயே நம் முன்னோர்களும், நாயன்மார்களும், அருளாளர்களும் இறைவன் மீது இசை கலந்த பாடல்களைப் பாடியுள்ளனர். அந்த வகையில் வேம்படியாள் விநாயகர் மீது பாடப் பெற்ற பாடல் முயற்சி பாராட்டத்தக்கது. உலகில் சாந்தியும் சமாதானமும் நிலவ இப்பாடல்களால் விநாயகப் பெருமானைப் பாடுந்தோறும் மக்கள் செல்லும் நெறிகளின் தடைளை அவர் நீக்குவார்.

கந்தரனுபூதி பாடிய அருணகிரிநாதர் "செஞ்சொற் புனைமாலை சிறந்திடப் பஞ்சக்கர ஆனை பதம் பணிவாம்" என விநாயகரை பாடித்துதிப்பதைக் காணலாம். விநாயகர் இல்லாத இடத்தில் மகாலட்சுமி வாசம் செய்யமாட்டாள் என்பது புராணங்கள் தரும் செய்தி. அந்த வகையில் வேம்படியாள் விநாயகர் மீது பாடிய பாடல்களைப் பாடிப்பரவ நாம் புண்ணியம் செய்தவர்களாகின்றோம்.
"விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான் விநாயகனே வேட்கை தணிவிப்பான்"

இத்தகைய விநாயகன் மீது பாடப்பெற்ற பாடல்களை நாமும் பாடி இவ்வுலகில் சாந்தியும் சமாதானமும் நிலவி அனைவரும் இன்பமாக வாழ எல்லாம் வல்ல வேம்படியாள் விநாயகப்பெருமான் அருள்புரிய வேண்டுமெனப் பிரார்த்தித்து பாடலாசிரியர் கவிஞர் கூத்தாடி.வி.சி.குஞ்சிதபாதம் அவர்களின் இறை பணியை வாழ்த்தி வணங்குகின்றேன்.

**திருமதி.கார்த்திகா லோகநாதன் (சித்தன்கேணி)**
**இயன்மருத்துவர்** (Physiotheropist)

# வேம்படியாள் விநாயகர்



யாழ் சுண்டுக்குழியைச் சேர்ந்த கவிஞர் கலைஞர் கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம் ஐயா அவர்களினால் வெளியிடப்படும் "மனிதம்" எனும் கவிதை நூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இன்று எமது யாழ்ப்பாணச் சூழலை உற்று நோக்கினால் எங்கு பார்த்தாலும் அராஜகமும் அட்டகாசமும், போட்டியும் பொறாமையும், சுயநலமும் தலைவிரித்து ஆடுவதைக் காணலாம். எமது சைவசமயத்தை விலைபேசி விற்கும் ஒரு கூட்டம் வெளிநாட்டு நிதி உதவியால் கவரப்பட்டு, பட்டிதொட்டி எங்கும் சென்று மதமாற்ற முயற்சியில் ஈடுபட்டு வருகின்ற இக்கால கட்டத்தில், சுண்டுக்குழியில் பிறந்து தனது வாழ்நாளின் கடைசி காலப் பகுதியை மூளாயூரில் வாழ்ந்து வருகின்ற இவர், தான் இருக்கும் இடத்தில் ஓர் ஆலயம் அமைக்க வேண்டும் என்ற விடாமுயற்சியினாலும், அன்பர்களின் அளப்பரிய உதவிகளினாலும் ஓர் விநாயகராலயத்தை அமைத்து, அதற்கு "வேம்படியாள் விநாயகர்" என்னும் நாமத்தைச் சூட்டி வழிபாடாற்றி வருகின்றார்.

இவர் தமது அரசபணிக்கு ஈடாகக் கல்வித்துறையிலும், கலைத்துறையிலும், இறைபணியிலும் சிறந்து விளங்கியவர், விளங்குபவர். இன்று இவ்விநாயகர் ஆலயம் பற்றி கவிதை நூல் வெளியிடுவது பாராட்டுக்குரியதாகும். இந்த முயற்சி பல கவிதை நூல்களின் ஆக்கங்களுக்கு வழிகோல வேண்டுமெனவும், அதற்கு எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் அருள் புரியவேண்டுமெனவும் வேண்டுகின்றேன்.

- வாழ்க மனிதம் -

அன்புடன்
செல்வி.ப.சாந்தலட்சுமி
உப அஞ்சல் அதிபர்,
மூளாய்.

# கணபதியான் கருவூலம்



மூளாய் வேம்படியாள் விநாயகரின் பாதரவிந்தங்களைப் பணிந்தேத்தி மதிப்பிற்குரிய கவிஞர், கலைஞர் கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம் அவர்களினால் உருவாக்கம் பெற்று "மனிதம்" எனும் கவிதை நூல் வெளியிடப்படுவது குறித்து எனது மனச் சிதறல்களை வெளிக்கொணர்வதில் பேரானந்தமடைகின்றேன்.

நமது நாட்டிலே சமீப காலமாக களவு, கொலை, சிறுவர் துஸ்பிரயோககங்கள், பெண்களுக்கெதிரான வன்முறைகளென பல்லினப் படுபாதகச் செயல்கள் நம் கண்முண்னே நித்தமும் அரங்கேறிக்கொண்டிருக்கின்றன. இச் செயல்களின் மூலகாரணம் எதுவென ஆராய்ந்து பார்த்தால் நம் இளைய வயதினருக்கு நமது சமய கலாச்சாரங்கள், பண்பாடுகள், கடமைகள், சமய ஒழுக்கக் கட்டுப்பாடுகள் பற்றிய தெளிவின்மையே என்பது தெளிவாகும். பத்து வருடங்களுக்கு முற்பட்ட காலங்களில் ஆலயத் திருவிழாக்களின்போது ஆன்மீகச் சொற்பொழிவுகளும், பஜனைகளும், புராணங்களின் தொகுப்பாகக் கூத்துக்கள், நாடகங்கள் போன்றவற்றை நடாத்தி வளரும் பருவத்தினருக்கு நல்ல கருத்துக்களை நம் மூத்த வயதினர் போதித்து வந்தனர். ஆனால் தற்போது ஆலயத் திருவிழாக்களை சினிமாப் பாட்டுக் குழுவினரும், கேளிக்கை நிகழ்ச்சியை நடாத்துவோருமே ஆக்கிரமித்துள்ளனர். இதற்கு இளம் சமுதாயத்தினருடன் சேர்ந்து முதியோரும் செயற்படுகின்றனர்.

இப்படியான காலகட்டத்திலும் கூட யாழ் நகரின் சுண்டுக்குழியிலே பிறந்து கலையுலகின் கதாநாயகனாகப் பல மேடைகள் ஏறி, நல்லதோர் குடும்பத் தலைவனாய், சிறந்த அரச சேவையாளனாய் வாழ்ந்து, வாழ்வின் இறுதிக் காலப்பகுதியை நம் முத்தான மூளாயூரில் கழிக்க வந்தபோதும், தமது வயது, உடல்நலக்குறைவு என்பவற்றையும் பொருட்படுத்தாது, கலையெனும் பெரு விருட்சத்துக்கு கிளைகளைப் பரப்பி, நம் ஊரையும் சமூகத்தையும் பெருமையுறச் செய்வதில் நம் கவிஞர் பேரானந்தம் கொள்கின்றார். தம் கற்பனையில் உருவாகிய விநாயகப் பெருமானுக்கு அடியார்கள் அகங்கோணாது அள்ளி வழங்கிய ஆதரவும் நிதியுதவியும் ஆலயமமைக்கும் பணியில் ஓர் பகுதியை குறுகிய காலத்தில் முடிக்கப் பெரிதும் உதவியது.

தினமும் காலையும் மாலையும் ஒரு மணித்துளி கூட நேரந்தவறாது, இங்கு சேவை புரியும் [illegible], முதியோர்கள் ஆகியோரின் உயர்ந்த, இனிய குரல் வளம் கொழிக்கப் பல பதிகங்களைப் பாடுவது கேட்போரின் உள்ளங்களைக் கொள்ளை கொள்கின்றது. இவ்வினிய கான மழையால் கட்டுண்டு நிற்போர் கரிமுகனின் காலடியில் தஞ்சமடைந்தோராவர்.

இவ்வாலயத்தில் நேரம் தவறாது காலையும் மாலையும் ஒலிக்கும் மணியோசை வீட்டிலிருந்தவாறே விநாயகனை வழிபட வழிவகுத்துள்ளது என்றால் மிகையாகாது.

மேலும் எம் நெஞ்சை விட்டு என்றும் விலகா வண்ணம் வேம்படியாள் விநாயகனை பரவிப் பல பாடல்களைத் தொகுத்து "மனிதம்" எனும் மகுடத்தின் கீழ் வெளிவரும் இக் கவிதை நூல் உலகில் தமிழர் வாழுமிடங்களிலெல்லாம் மணம் பரப்ப வேம்படியாள் விநாயகன் வழிவகுப்பானென்ற நம்பிக்கையுடன் நிறைவு செய்கின்றேன்.

அன்புடன்
திருமதி வேணுகா ராஜாராம்
ஆனந்தபவன் கபே,
வைத்தியசாலை வீதி, மூளாய்.

# வாழ்த்துச் செய்தி

சுண்டுக்குழியைப் பிறப்பிடமாகக் கொண்ட கவிஞர் கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம் அவர்கள் மனிதரை நேசிக்கும் மாண்பினைக் கொண்டவர் மூளாய் வைத்தியசாலையில் வைத்திய சேவையுடன் இறையருளையும் இணைக்க இறைவனுக்கு கோயில் எழுப்பியவர் மனித மனங்களுக்கு அமைதி தரும் கவிதைகளைக் கொண்ட இம் "மனிதம்" நூலை வெளிக் கொண்டு வருவதில் மகிழ்ச்சி அடைகிறேன். சமூகச் சேவையை மேற்கொள்வதற்காகவே இந் நூல் பயன்பட உள்ளதை அறிந்தேன். நூல் வெளியீடு சிறப்புறவும் கவிஞர் நீடூழி வாழ்ந்து சேவையிற் சிறக்கவும் விநாயகரைப் பணிந்து வேண்டுகின்றேன்.

"மனிதம்" வாழ்க



திருமதி.சுந்தரபாரதி சிவமலர்
அதிபர்
யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்

## பல்துறைப் பணியாளர்



ஈழமணித் திருநாட்டில் வலிகாமம் மேற்கு சைவத் தமிழ்ப் பண்பாட்டுப் பாரம் பரியங்களை நிறைவாகக் கொண்டது. இப் பிரதேச பண்பாட்டின் நிலைக் களமாக ஆலயங்கள் விளங்குகின்றன. அவ்வகையில் மூளாய்க் கிராமத்தில் எழுந்தருளி அடியார்க்கெல்லாம் அருள் பாலித்துக் கொண்டிருக்கின்ற "வேம்படியாள் விநாயகர் ஆலயம்" சீரும் சிறப்பும் வாய்ந்ததாகும்.

இவ் ஆலயத்தின் வளர்ச்சிக்காக அயராது பாடுபட்டு வருபவர் அரசசேவை ஓய்வூதியரும், கவிஞரும், கலைஞருமான கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம் ஆவர். அவரின் பல்துறைப்பணிகளில் மேலும் ஒரு சேவையாக "மனிதம்" என்ற நூல் வடிவம் அவரால் வெளியிடப்படுகின்றது.

"என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற அருள் வாக்குக்கமைய இவ்வாலய வளர்ச்சியினூடாக, சமூக வளர்ச்சியை ஏற்படுத்த முனைந்து நிற்கின்ற அன்பரின் பணி பாராட்டத்தக்கது. மூளாய் வேம்படியாள் விநாயகப் பெருமானின் திருவருள் எல்லோருக்கும் நிறைவாகக் கிடைக்கவேண்டுமென வேழமுகத்து விநாயகனின் திருவடிகளைப் பணிந்து வணங்குகின்றேன்.

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

**அன்புடன்**
**இ.சிறிரஞ்சன்**, B.A
**கிராம உத்தியோகத்தர்**
J 171/ **மூளாய்.**

## "மனிதம்" மலரட்டும் என்று வாழ்த்துகிறேன்.



வயதில் முதிர்ந்தவர் அனுபவத்தில் முதிர்ந்தவர், கலையில் முதிர்ந்தவர் உயர் திரு.வி.சி.குஞ்சிதபாதப் பெரியாரை நான் நன்கு அறிவேன். நாடகக் கலைக்குப் பெயர்போன யாழ்ப்பாணம் சுண்டுக்குழிக் கிராமத்தில் பிறந்து, சிறந்த கல்வியைப் பெற்று, அரச பதவி வகித்து இணையாகக் கலைகளையும் வளர்த்து வந்த பெரியவர். பலமேடைகளேறி மக்களின் அபிமானத்தைப் பெற்ற "அடங்காப்பிடாரி" என்னும் நாடகம் இவரின் நெறியாள்கையிலே உருவானதாகும். அதுமட்டுமல்லாமல் பல நாடகங்களையும் பாடல்களையும், கவிதைகளையும், எழுதி அரங்கேற்றிய பெருமையும் இவருக்குரியதாகும்.

இந்த வேளையிலும் சிந்தனையிலே எந்த விதமான தளர்ச்சியுமின்றி விநாயகனைப் பற்றிய அற்புதமான பாடல்களை இயற்றி அவற்றை "மனிதம்" என்ற தலைப்பிலே புத்தகமாக வெளியிடுவதற்காக மேற்கொண்டிருக்கும் முயற்சி பாராட்டுக்குரியதாகும்.

பெரியாருடைய முயற்சிக்கும், ஆற்றலுக்கும் வாழ்த்துக் கூறுகின்ற வயதினை நான் எட்டிப்பிடிக்காவிட்டாலும் ஒரு துறைசார்ந்த பாடகி என்ற வகையிலே அவருடைய "மனிதம்" என்னும் நூல் சிறந்த முறையில் வெளிவந்து மக்கள் பயன்பெற வாழ்த்துகின்றேன்.

**மூளாய்,**
**சுழிபுரம்.**

**வாஞ்சையுடன் வாழ்த்தும்**
**திருமதி.பங்கையச் செல்வி முகுந்தன்**
**காரைநகர் தியாகராஜா மத்திய**
**மகாவித்தியாலயம்.**

# "மனிதம்"
# கவிதை நூல் வெளியீட்டு விழா
# நிருவாகிகள்

| | |
|---|---|
| தலைவர் | :- திரு. மா.ஞானேஸ்வரன், பொறியலாளர் |
| உப தலைவர் | :- திரு வி.வேலுப்பிள்ளை, பொறியலாளர் |
| செயலாளர் | :- திரு க. செல்வராசா, சமாதான நீதவான் பொதுச் சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர் |
| விழா அமைப்பாளர் | :- திரு வி. விக்னேஸ்வராராஜா |
| நூலாசிரியர் | :- கூத்தாடி. வி.சி. குஞ்சிதபாதம் |

நிருவாக சபை உறுப்பினர்கள்

1. திருமதி சகுந்தலா ஜெயரட்ணம்
2. திருமதி பரமேஸ்வரி தவராசா
3. திரு தி. கனகசபை
4. செல்வன் த. திருச்செந்தூரன்
5. செல்வி பொ. ஆனந்தவல்லி
6. செல்வன் ப. ரமணன்
7. திருமதி கௌசிகா கஜபதி
8. திரு ச. கோபால கிருஸ்ணன்
9. செல்வி கலைமகள். ஆனந்த மூர்த்தி
10. செல்வி ஜெயந்தினி ரகுநாதன்
11. செல்வி யோகேஸ்வரி நாகமுத்து
12. செல்வி குணேஸ்வரி நாகமுத்து
13. செல்வி சரோசா பத்மராசா

# விழாக் குழுவினர்



**இருப்பவர்கள் இடமிருந்து வலம்**
செல்வி.பொ.ஆனந்தவல்லி,திருமதி.சகுந்தலா ஜெயரட்ணம், திருமதி.ளெசிகா கஜபதி
திருமதி.பரமேஸ்வரி தவராசா, திரு.மா.ஞானேஸ்வரன் (தலைவர்)
திரு.க.செல்வராசா, திரு.சி.விக்னேஸ்வரராஜா, செல்வன் ப.ரமணன்,
செல்வன்.த.திருச்செந்தூரன்

**மத்தியில் நிற்போர் :- இடமிருந்து வலம்**
செல்வி.கலைமகள் ஆனந்தமூர்த்தி, செல்வி.சரோஜா பத்மராஜா,
செல்வி.ஜெயந்தினி ரகுநாதன், செல்வி.குனேஸ்வரி நாகமுத்து,
செல்வி.யோகேஸ்வரி நாகமுத்து

**மேல்வரிசையில் நிற்போர் :- இடமிருந்து வலம்**
திரு.தி.கனகசபை திரு.வி.சி.குஞ்சிதபாதம், திரு.ஆ.ஏகாம்பரநாதன்,
திரு ச.கோபாலகிருஸ்ணன்.

## தேப்ப மெனக் காத்திடப்பா !

வேம்படி யாள் விநாயகனே !
விற லீயும் வித்தகனே !
தேம்பியுனை வழுத்துகிறோம்
தேப்ப மெனக் காத்திடப்பா !

## மீள வழி காட்டிடையா !

மூளாயம் பதி யமர்ந்து
முழுநிலவா யொளி யுமிழும்
வேழ முக நாயகனே !
வெவ் வினையை வேரறுக்க
நாளெலாம் உன் பதத்தை
நாடித் துதிக் கின்றோம்
மீள வழி காட்டிடையா !
மீட்சிதனை யீந்திடையா !

"மனிதம் மலரட்டும்
புனிதம் பொலியட்டும்"

- கூத்தாடி -

## மூளாய்ப் பதியினை நாடுங்கடி !

மூளாய்ப் பதியினை நாடுங்கடி – நிதம்
மூழ்கி அவனருள் தேடுங்கடி!
வேழ முகத்தானை வேண்டுங்கடி – அவன்
வித்தை விளங்கிடப் பாடுங்கடி !

நாளும் அவன் பதம் நாடுங்கடி – நின்று
நாட்டில் அமைதியைப் பேணுங்கடி !
வாழும் வகையினைக் கூறுங்கடி – என்றும்
வாழ்வு வனப்புறப் பாடுங்கடி !

உள்ளம் உருகிடப் பாடுங்கடி – என்றும்
உரிமை உருப்பெறக் கூடுங்கடி !
கள்ளம் கரைந்திடப் பாடுங்கடி – நிதம்
கருணை கனிந்திட வேண்டுமடி !

செய்தொழி லூக்கிடப் பாடுங்கடி – நாட்டில்
செழுமை செழித்திட வேண்டுமடி !
வையம் வனப்புறப் பாடுங்கடி – என்றும்
வாழ்வு வளம்பெற வேண்டுமடி !

சித்தம் தெளிந்திடப் பாடுங்கடி – வாழ்வில்
சீர்த்தி சிறந்திட வேண்டுமடி !
அத்தன் மகன்பதம் தேடுங்கடி – அவன்
ஆழம் அறிந்திட வேண்டுமடி !

## குவலயத்தில் வாழவைப்பாய் !

ஆணவம் கன்மம் மாயை
ஆதியாம் மலங்கள் மூன்றும்
பேணுதல் பொய்மையாகும்
பெருக்குதல் பெருங்கே டாகும்
காணவே களிப்பி லாழ்த்தும்
கரிமுகன் கழலின் மேன்மை
பூணவே புனிதம் சேர்க்கும் !
புன்மையைப் புதைத்து ஈர்க்கும்!

துள்ளிக் குதித்து வந்து
துயர் துடைக்கும் தூயவனே !
அள்ளித் தருமருளால்
அகில மதைக் காப்பவனே !
கள்ளமெலாம் கரைந் தகல
காசினியை யாள் பவனே !
கொள்ளையின்பம் தந் தெம்மை
குவலயத்தில் வாழ வைப்பாய் !

தத்தித் தவழ்ந்து வந்து
தாய்மடியில் ஏறி நின்று
நித்தம் மகிழ் வீயும்
நீளுலகின் நித் திலமே !
பித்துப் பிடித் துன்மேல்
பேயா யலை கின்றோம்
சித்தம் தெளிய வைப்பாய்
சிருங்காரச் சீர்த் திகனே !

## பற்றிடுவாய் எம் கரத்தை !

வீசுபுகழ் நகர் நூளாய்
விளக்கி நிற்கும் தத்துவங்கள்
தேசுபிறை திரு வழகன்
திரு மகனே ! விநாயகனே !
மாசகற்றி மா தலத்தை
மாட்சியுடன் ஆட்சி செய்யும்
பாசமிகு கரி முகனே !
பற்றிடுவாய் எம் கரத்தை !

உலகத்தில் உயர் மொழியால்
உன்னதத்தைச் சேர்த் தென்றும்
தலையாக மிளிர்ந் தொளிரும்
தவநூளாய்ப் பதி யழகா !
கலையுமிழும் உன் கோயில்
கவர்ந் திழுக்கும் காந்தமையா !
மலையாக நீ யிருந்து
மகிழ்வதனைத் தந் திடையா !

நாளும் அருள் சொரியும்
நவநூளாய்த் திருத் தலத்தில்
வாழும் வழி தெருட்டும்
வண்மை மிகு திண்ணியனே !
சூழும்தீ வினை களைந்து
சுந்தரத்தைத் தந்து நிதம்
பாழும் படு துயரம்
பற்றாமல் பார்த் திடையா !

## சாந்தியை யீந்திடையா !

சுந்தரத் தமிழா னுன்னை
சுவைத்திடும் பேறு பெற்றோம்
அந்தரத் துழலும் மாந்தர்
அவதியைப் போக்க வல்ல
எந்தையே ! எழிலி னேறே !
ஏத்திப் பணிகின்றோம்
சந்ததம் எம்மைக் காத்து
சாந்தியை யீந்திடையா !

நாளும் நலமீயும்
நல்ல தமிழ் நாயகனே !
வேழமுகம் காட்டி யெங்கள்
வேதனைகள் வெந் தளிய
நாளும் துதித் துன்னை
நலமீய வேண்டுகிறோம்
வாழும் வகை தெருட்டி
வனப்பதனைத் தந் திடையா !

தந்தையும் தாயும் நீயே !
தனித்துவத் தலைவன் நீயே !
சிந்தையை அள்ளிக் காக்கும்
சீத்துவச் செம்மல் நீயே !
உந்துதல் தம்மா லெம்மை
உயர்த்திடும் உண்டி நீயே!
கந்தலாய்க் கருகி டாமல்
காசினி தனையே காப்பாய் !

## அன்பே சதம்

வாழ்வியலின் தத்து வத்தை
வளமாக வே தெருட்டி
தாழ்வின்றி வாழ வைக்கும்
தனித்துவத்தின் ஒளிப் பிழம்பே !
நாளெலாம் உன் னடியார்
நாவினிக்கப் பாடு கின்றார்
பா படைக்கும் பக்குவத்தை
பக்தருக்குத் தந் திடையா !

அன்பே சத மென்ற
அழியாத தத்து வத்தால்
துன்பு துணித் தழிக்கும்
தூய கரி முகனே
என்பை யுருக்கி நிதம்
ஏங்கித் தவிக்கின்றோம்
இன்பச் சுட ரொளியாய்
ஏற்றம் அளித் திடையா !

ஐந்து கரத் தோனே !
ஆனை முகத் தோனே !
நோந்து நொடி யாமல்
நோன்பிருந்து நெக் குருகி
சிந்தை தெளிந் தென்றும்
சீலம் சிறந் தொளிர
விந்தை விநோத மென
விக்கினங்கள் தீர்த் திடையா !

## பக்குவத்தைத் தந்தி டையா !

எத்திக்கும் ஒளி பரப்பும்
ஏற்றமிகு கரி முகனே !
தித்திக்கும் தமிழ் மணக்கும்
தீஞ்சுவையின் திருச் சுடரே !

பாதம் பணி கின்றோம்
பக்குவத்தைத் தந்திடையா !
தேடி யலை கின்றோம்
தெப்பமெனக் காத்தி டையா !

காலைக் கதிர வனாய்
களமாடி யெமை யாளும்
சோலைக் கணபதியே !
சொர்க்கமதைக் காட்டி டையா !

**"நம்முடைய முயற்சியின் ஆரம்பத்தில் நம்மைப் பிறர் ஒப்புக் கொள்ளமாட்டார்கள் ஆனால் நம்பிக்கையைக் கைவிடாமலிருந்தால் காலக் கிரமத்தில் வெளியுதவிகள் தாமே வரும். ஆரம்பத்தில் நமக்கு நாமே துணை."**

– மகாகவி பாரதியார். –

## சுமை தாங்கும் சூத்திரன்

மூளா யெனும் பதியில்
முழுநிலவாய் முகிழ்ந் துறையும்
வேழ முக நாயகனே !
வெவ் வினைகளையும் வித்தகனே !
சூழு மிருள் துணித்து
சுமை தாங்கும் சூத்திரனே !
நாளும் எமைக் காத்து
நல்லருளைத் தந்தி டையா !

சத்தியம் நீதி நேர்மை
சமத்துவம் சமையப் பெற்று
இத்தலம் இறும்பூ செய்த
இனியபூ ரணனே ! வாராய்
பித்தனாய்ப் பிதற்று கின்றோம்
பீடுடை வாழ்வு கொள்ள
அத்தனின் மைந்தா உந்தன்
அருளதனை யள்ளித் தாராய் !

**"அன்பின் மூலமாகச் செய்யப்படும் எந்தப் பணியும் இறுதியில் நிலையான மகிழ்ச்சிக்கு வழி வகுக்கும்"**

**– சுவாமி விவேகானந்தர்–**

## பேராற்றல் ஈபவனே !

கன்னித் தமிழ் சுரக்கும்
கணபதியே! கலை மதியே!
பின்னிப் பிணைந் தெமக்கு
பேராற்ற லீ பவனே !
உன்னி யுனை வழுத்தும்
உத்தமத்தைத் தந்த வனே !
மன்னு புகழ் சேர்த்து
மாதலத்தைக் காத்திடையா !

சித்தம் தெளிய வைக்கும்
சிருங்கார நாயகனே !
நித்தம் எமைக் காத்து
நிம்மதியை யீயு முன்மேல்
பித்தம் பிடித் தென்றும்
பேயா யலை கின்றோம் !
புத்தம் புது வாழ்வை
பூதலத்துக் கீந் திடையா !

**"பெற்றுக் கொள்வதில் பெருமை என்ன இருக்கிறது? கொடுப்பவனே வாழ்வில் பேறுபெற்றவன் ஆவான்"**

**-சுவாமி விவேகானந்தர்-**

## சஞ்சலங்கள் துஞ்சிவிடும்

மூலப் பிரணவன் தாள்
முழுமனதாய் ஏத்தி வர
சாலச் சிறந் தொளிரும்
சஞ்சலங்கள் துஞ்சி விடும் !

உலகமே உன் கையில்
உன்னதத்தைத் தந்து விடு !
பலமெல்லாம் பார் தனுக்கே
பக்குவத்தை யீந்து விடு !

நர்த்தனக் கண பதியே !
நானிலமே யுன் சொத்து
வித்தகனா யிருந் தெங்கள்
விக்கினத்தைத் தீர்த்து விடு !

வலம் வந்த விநாயகனே !
வக்கிரத்தின் உக்கிரனே !
மலமகற்றி மா தலத்தை
மாட்சியுட னாட்சி செய்வாய் !

**"உலக நன்மைக்காக உங்களிடமுள்ள**
**அனைத்தையும்**
**தியாகம் செய்யுங்கள்.**
**சுயநலமில்லாத வாழ்வே உயர்ந்தது."**

**-சுவாமி விவேகானந்தர்-**

# பிணிகளையும் பெருமருந்து

மணி கொழிக்கும் மூளாயில்
மாட்சியுட னாட்சி செய்யும்
பிணிகளையும் பெரு மருந்தே
பேரின்பப் பேரூற்றே !
அணியாக யுனை வழுத்த
அடியார்கள் திரள் கின்றார்
பணிவாக வேண்டு கிறோம்
பார்தனையே காத்தி டையா!

வாழ்வியலின் தத்து வத்தை
வளமாக வே யுணர்த்தி
தாழ்வின்றி வாழ வைக்கும்
துவமூளாய்ப் பதி யழகா !
நாளெலா முனைத் தேடி
நாடிவரு முன் னடியார்
நீளுலகில் நிம்மதியாய்
நீடிக்கும் நிலை யீவாய் !

எட்டாக் கனி யாக
எந்நாளு மிருக் காமல்
கிட்ட நெருங்கி வந்து
கிருபையினை யீந்து நிதம்
பட்டுத் தெறித் தொளிரும்
பாங்கான ஒளிப் பிழம்பாய்
எட்டுத் திசையெங்கும்
ஏற்றம் அளித்திடையா !

## அன்பு மழை அகிலமெலாம் பொழிய வேண்டும்!

பள்ளத்தை நாடி வரும் வெள்ளம் போல
பாரினிலே பக்தரெலாம் உன்னைத் தேடி
தெள்ளியநற் சிந்தனையுடன் வந்து உந்தன்
திருப்பாதம் பணிகின்றார் பசுமை கூடி !

துன்பியலாம் துயரமது ஒழிய வேண்டும் !
தூயவொளி உலகெங்கும் பரவ வேண்டும் !
அன்புமழை அகிலமெலாம் பொழிய வேண்டும் !
அனைவருமே அதில் மூழ்க அருள வேண்டும் !

உயிர்கள்மேல் உன்னதமாய்க் காட்டு மன்பே
உயர்தருமம், உலகினிலே ஒப்பே யில்லை
கயமையெனும் பகைமையினைக் களைந்து அன்பால்
காசினியைக் கணபதியே ! காப்ப ாயப்பா !

**"பக்தியுடன் கடவுளின் திருநாமத்தைச் சொல்லுங்கள் எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுதலை கிடைக்கும்"**

**-பகவான் ஸ்ரீ.ராமகிருஸ்ணர்-**

## கரிமுகனே! கடைக் கண்ணால் பார்த்திடாயோ !

பாலுடனே தேன்கலந்த வாறு போல
பைந்தமிழால் உனைப்பாடும் பேறு பெற்றோம்
காலமெலாம் உனைத்தேடி ஓடு கின்றோம்
கரிமுகனே கடைக் கண்ணால் பார்த்திடாயோ !

சீலத்தால் சிறந்தொளிரும் சிவனின் மைந்தா !
சித்தமதைச் சிதறாது சீராய்க் காத்து
ஞாலமதில் நம்மினத்தின் ஞான மோங்கி
நுல்லாட்சி பெற்றிடவே நலத்தை யீவாய் !

**"சிலரால்தான் அஞ்சாமல் செயலாற்ற முடியும்**
**அஞ்சாமல் எண்ணமுடியும் அஞ்சாமல் பேசவும்**
**முடியும் எண்ணுவதில் அஞ்சாமை**
**இருந்தால்தான் முற்போக்குக் கருத்துக்களை**
**வரவேற்கவும் முடியும். பலரால் அது முடியாது.**
**சமயத்துறை, இலக்கியத்துறை,**
**அரசியல்துறை, இப்படி எல்லாத்துறைகளிலும்**
**அஞ்சாமல் எண்ண வல்லவர்கள்தான்**
**உலகுக்கு ஏதாவது செய்துவிட்டுப்**
**போகிறார்கள்."**

–டாக்டர் மு.வரதராஜன்–

## சூட்சுமத்தைத் தந்திடுவாய் !

விநாயகனே யுன் னருளால்
விக்கினங்கள் நீங்கி டவே
வித்தையினை நித்தி யமாய்
இத்தரையி லீந் திடுவாய்

வாழும் வகை தெருட்டும்
வனப்பான ஐங்கரனே !
சூழும்தீ வினை களைந்து
சூட்சுமத்தைத் தந் திடுவாய் !

ஏல்லோரும் எல்லாம் பெற்று
இல்லாதா ரில்லை யென்ற
வல்லநற் சமுதா யத்தை
வடிவமைக்க வந்திடுவாய் !

செத்தாரைச் சாவார் காவும்
சேதியை யேன் மறந்தோம்
நித்தியம் அன்பே யென்ற
நீதியைச் செப் பிடப்பா !

**"மனத்தூய்மை இருந்தால் மட்டுமே கடவுளை அடைய முடியும்.**
**மற்றவை எல்லாம் இரண்டாம் பட்சம் தான்."**

**-சுவாமி விவேகானந்தர்-**

## சந்ததம் எம்மைக் காக்கும் !

சிந்தையை யள்ளும் மூளாய்
சீரிய சேவை யீந்து
எந்தையா யென்று மெம்மை
எழிலுடன் வாழ வைக்க
விந்தைசேர் கோபு ரத்துள்
விளக்கிடு மருளி னாட்சி
சந்ததம் எம்மைக் காக்கும்
சரித்திர மிதற்கே சாட்சி !

கொலையாளும் கொடிய நிலை
கொழுந்து விட் டெரியாமல்
மலையாக மானி டத்தை
மாதலத்தில் காப் பதற்கு
கலைமேவும் கருனை யினால்
காரிருளைக் களைந்து நிதம்
நிலகுலையா நிம் மதியை
நீளுலகுக் கீந் திடையா

"அரிய பெரிய விஷயம் எல்லாம் பலத்த
துடைகளைச் சந்தித்த பிறகே கைகூடுகின்றன.
அதனால், முயற்சியை ஒருபோதும் கைவிடாதீர்கள்."

-சுவாமி விவேகானந்தர்-

## தூயவை துலங்கவேண்டும் !

தூங்கக் கரி முகனே !
தூய மணிச் சுடரே !
பங்கமே யில்லா வாழ்வை
பார்தனுக் கீந் திடையா !

நாளெலா முந்த னாட்சி
நலிவுறா தமைய வேண்டும்
தாழ்விலா வாழ்வு பெற்று
தாரணி யொளிர வேண்டும் !

செய்தொழி லோங்க வேண்டும்
செழுமையே யாள வேண்டும்
வையமே வாழ வேண்டும்
வனப்பினில் மூழ்க வேண்டும் !

மனிதமே மகிழ வேண்டும்
மாதலம் திகழ வேண்டும்
புனிதமே பொலிந்து நாளும்
புன்மையைப் புதைக்க வேண்டும் !

அன்பது ஆள வேண்டும்
அறிவதில் நீள வேண்டும்
துன்பது துடைத் தழித்து
தூயவை துலங்க வேண்டும் !

## பெட்புடனாற்றல் தாராய் !

உலகத்தில் உயர் மொழிக்கு
உன்னதத்தை ஈந்தவனே !
பலமெலா முன் கையில்
பாதம் பணி கின்றோம் !

கலையுமிழு முன் பார்வை
காசினி யிலே கனிந்து
சிலையாக நின் றெமக்கு
சித்தியினைத் தந் திடையா !

காலம் கனிந்து வர
கட்டழகு மொட் டரும்ப
சீலம் சிறந் தொளிர
சீர்த்திதனைத் தந் திடையா !

ஆணவம் கன்மம் மாயை
அனைத்தையும் அகற்றி வாழ்வை
பேணவே பெரும்பே றீந்து
பெட்புட னாற்றல் தாராய் !

**கலையின் நோக்கம்**
**ஒன்றின் வெளித்தோற்றத்தை பிரதிபலிக்காது**
**அதன் அகச்சிறப்பை வெளிக் கொணர்வதே.**

**– அரிஸ்டோடல் –**

## பக்குவத்தைத் தந்திடையா !

ஊரெலாம் கூடி யுனை
உளமார வேண்டு கின்றார்
பாரெலாம் பரி மளிக்கும்
பக்குவத்தைத் தந் திடையா !

வாழ்விலே வசந்த மென்றும்
வளமாக வீச வேண்டும்
தாவின்றி வாழ் வமைய
தக்க நிலை யீய வேண்டும் !

மூலப் பிரணவன் தாள்
முத்தி பெறச் சக்திதரும்
சாலப் பொலிந் துலகில்
சமத்துவத்தை யே சமைக்கும் !

நம்பிக்கை ஒளிக் கீற்றை
நாளு மெமக் கீயும்
தும்பிக்கை யான் பாதம்
துன்பு துடைத் தழிக்கும் !

**நீ சொன்னதை மக்கள் மறக்கலாம்.**
**நீ செய்ததையும் கூட மற்றவர்கள் மறக்கலாம்.**
**ஆனால் நீ அவர்களை உணரவைத்ததை மட்டும்**
**என்றும் மறக்கமாட்டார்கள்.**

**– மாயா அஞ்சலோ –**

## துயர் துடைக்கும் தூயவனே !

துள்ளிக் குதித்து வந்து
துயர் துடைக்கும் தூயவனே !
அள்ளித் தரு மருளால்
அவனிதனைக் காப் பவனே !
வெள்ளை யுள்ளம் சுரக்க
வேட்கை தமை யீபவனே !
கள்ளம் கரைந் தழிய
காசினியைக் காத் திடப்பா !

பஞ்சுபடும் பாடு படும்
பாரதனைத் தாங்கி வரும்
விஞ்சு மூளா யழகா !
வித்தகனே ! சத்தியனே !
தஞ்சம் அடைந்தோரைத்
தாங்கித் தலை நிமிர்த்தும்
கொஞ்சு தமிழ்க் குரவா !
குலம் தழைக்க வைத்திடப்பா !

**உனது நோக்கினை அடைவது கடினமானதாக தெளிவாகத் தெரிந்தால், நோக்கினை மாற்ற முயலாதே. நோக்கை அடைவதற்கான செயன்முறையை மாற்று.**

**– கன்பூசியஸ் –**

# தஞ்சம் அடைந்தோர்க்குத் தக்கவழி காட்டிடையா !

உத்தமனே ! நித் தியனே !
உலகாளும் சத் தியனே !
பித்துப் பிடித் துன்மேல்
பேயா யலை கின்றோம்
சித்தம் தெளிந் திடவே
சீர்மேவு ஐங்கரனே !
நித்தம் எமைக் காத்து
நிம்மதியைத் தந்திடையா !

கொஞ்சிக் குலாவி நிதம்
குவலயத் தையே சுமந்து
விஞ்சு மரு ளீயும்
வேழமுக நா யகனே !
மஞ்சு கொடி பிடித்து
மாட்சியுட னாட்சி செய்து
தஞ்சம் அடைந் தோர்க்கு
தக்கவழி காட்டி டையா !

சொல்லொணாத் துன்பம் வந்து
சுட்டெம்மை எரித்திட் டாலும்
அல்லவை அணி திரண்டு
அவனியை அழித்திட் டாலும்
தில்லையில் திருக் கூத் தாடும்
திருவிடை தீர்த்தன் மைந்தன்
வல்லமை யாலே என்றும்
வளம்நிதம் கொழிக்கும் காணீர் !

## வித்தையினை நித்திலமாய்
## இத்தரையி லீந்திடுவாய் !

சித்தி தரும் நாயகனே !
சீர்த்தி தனைப் பெறவே
வித்தையினை நித் திலமாய்
இத்தரையி லீந் திடுவாய் !

காலக் கதிரவனாய்
களம் புகுந்து விளையாடி
சீலம் சிறந் தொளிர
சிறுமை தமைச் சிதைப்பாய் !

வாழும் வகை தெருட்டும்
வனப்பான வா ரணனே !
சூழும் தீவினை களைந்து
சுந்தரத்தைத் தந் திடுவாய் !

தமிழலை தனிலே சிக்கி
தடுக்கியே வீழ்ந்தபேர்கள்
உமியென நீங் கிடாது
உண்மையை உணர்த்து வாயே !

**உன் வாழ்க்கை நீ வாழ்ந்து முடிந்த வருஷங்களால் கணக்கிடப்படுவதில்லை. மாறாக, அந்த வருஷங்களில் நீ வாழ்ந்த வாழ்வில் கணக்கிடப்படுகின்றது.**

**– ஆபிரகாம் லிங்கன் –**

## மூளாய்த் திருத்தலம் நாடுங்கடி !

மூளாய்த் திருத் தலம் நாடுங்கடி —அங்கு
மூழ்கி அவன்புகழ் பாடுங்கடி !
எல்லையில்லாத அவன் கருணை-என்றும்
ஏற்றம் பெறவழி தேடுங்கடி !

கன்னித் தமிழ் மணம் வீசுதடி —அங்கு
கணபதி யானருள் கூடுதடி !
பின்னிப் பிணைந்தெமைக் காக்குதடி-பாரில்
பெற்றி பெருகிட வேண்டுமடி !

நாடு நலம்பெற வேண்டுமடி —அங்கு
நாளும் விளைந்திட வேண்டுமடி !
காடு கலைந்திட வேண்டுமடி — எங்கும்
களனி கதிர்விட வேண்டுமடி !

**புத்தகங்கள் மனிதர்களல்ல. இருந்தும் அவை உயிரோடுள்ளன. அவை மனித ஞாபகார்த்தங்கள், அவனுடைய முன்னேற்ற விருப்பங்கள், நிகழ் காலத்திற்கும், எதிர்காலத்திற்கும் உள்ள தொடர்பு அவன் உபயோகப்படுத்தும் ஆயுதங்கள்.**

**–ஸ்டீபன்லின் செண்ட்பெனட்–**

## காசினியே தேசுபெறும்

தேன் சொரியும் மூளாயில்
திரள்கின்ற உன் னடியார்
வான் முகட்டை யெட்டு முந்தன்
வளங்காணத் துடிக்கின்றார் !

கைகூப்பி யுனை வழுத்த
காரியங்கள் கை கூடும்
செய்கரும மோங்கி நிதம்
செகத்தினையே வாழ வைக்கும் !

உள்ளம் உயர்வு பெற
உனை வழுத்த வேண்டு மையா !
கள்ளம் கரைந் தகல
காசினியே தேசு பெறும் !

விழிவழியே யுனை வழுத்த
விக்கினங்கள் தீரு மையா !
ஒளிபரப்பி உல காளும்
உன்னதமே ஓங்கு மையா !

**கோழைகளே வாழ்வில் பாவம் செய்கின்றனர்.**
**தைரியம் கொண்டவர்கள் ஒருக்காலும்**
**பாவம் செய்யமாட்டார்கள்.**

-சுவாமி விபுலானந்தர்-

## தொல்லை துடைத்தகற்றி
## தூயவழி காட்டிடப்பா!

எல்லை யில்லா அருளை
என்றும் எமக் கீயும்
வல்ல தமிழ்க் கிழவா !
வளமீயு முன் கருணை
அல்ல லறுத் தென்றும்
அவனிதனை வாழ வைக்க
தொல்லை துடைத் தென்றும்
தூயவழி காட் டிடப்பா !

ஏறுகின்ற பக்தி யினால்
எழுகின்ற நாத மழை
மாறுபட்ட மனங்களையே
மாதலத்தில் மாற்றி வடும்
சீறிவரும் சிறுமை தமை
சிதைத்தழிக்கும் சீர்த்தி யினால்
ஊறு களையே களைந்து
உன்னதத்தைத் தந்திடப்பா !

**தெய்வ நம்பிக்கை நிலைமாறாமை, நற்குணம் அம்சமின்மை, சரணாகதி, அகங்காரமில்லாமை இவையே பக்தி, இறைவனை நோக்கிய பாதையில் முன்னேறிச் செல்வதற்கு ஒருவருக்கொருவர் ஊக்கமளியுங்கள். சரணாகதிதான் முக்தியை அடைவதற்கு முக்கிய நுழைவாயில்.**

–பாபா–

## சித்தமதைச் சிதறாது காப்பாயப்பா !

மூலப் பிரணவனே உந்தன் தாளில்
முழு மனதாய் சரணடைய வேண்டுகின்றோம் !
ஞாலமதில் நாம் சிறப்பாய் வாழ்வதற்கு
நாதனருள் வேண்டிநிதம் நாம் துதிக்க
கோலமுடன் கொள்கைதனைப் பற்றி யாங்கே
குலவுகையில் குணச்சிறப்பு ஒளிரக் கண்டோம்
சீலமெலாம் சீர்த்தி பெற சிவனின் மைந்தா
சித்தமதைச் சிதறாது காப்பா யப்பா !

-.-

**மக்களிடையே பொதுப்பணி புரிபவர்கள் தன்னடக்கம் மிக்கவர்களாகவும், சரியான முறையில் சிந்திக்கத் தெரிந்தவர்களாகவும், அகந்தையும், மூர்க்கத்தனமும் தங்களை அண்டவிடாமல் தற்காத்துக் கொள்பவர்களாகவும் இருக்க வேண்டும். கூசாமல் சுய விமர்சனம் செய்து கொள்ளவும், தவறு நிகழும் போதும் பணியில் குறைபாடு இடம்பெறும் போதும், துணிவுடன் திருத்திக் கொள்ளும் தன்மை உள்ளவராகவும் இருக்க வேண்டும்.**

**-மாஓ சேதுங்-**

## நனி சிறந்து வாழட்டும் !

தும்பிக்கை யா னென்றும்
தூய வொளி யீயட் டும் !
சத்தான சமுதாயம்
சரித்திரத்தைப் படைக்கட்டும் !

செய்தொழில்க ளோங் கட்டும் !
சீரிளமை வா ழட்டும் !
நொய்தவரி னுள மெல்லாம்
நொடிப் பொழுதில் மீளட்டும் !

அன்புடமை ஆளட்டும் !
அதி லுலகு வாழட்டும் !
துன்பதனால் மா ழாமல்
துடைத் ததனை யோட்டட்டும்!

சாதி மத பேதமென்ற
சகதி யெலாம் மாளட்டும் !
நாதியற்ற நம் மவர்கள்
நனி சிறந்து வாழட்டும்!

**நீ பேசும் முன் யோசி,**
**யோசிக்கு முன் வாசி.**

**– பிரான்சிஸ் ஆன் லெபோவிற்ஸ் –**

## - முத்தி தரும் மூலவன் -

முத்தி தரும் மூலவனே!
மூலவிருள் நீக்கி யென்றும்!
சத்தியத்தைக் காப் பவனே !
சாந்தி தனை யீபவனே!
சித்து விளை யாட்டில்
சீரிளமை தந் தென்றும்
வித்துவத்தை விளக்கி நிதம்
விண் மகிழச் செய் திடையா!

" நமது தாய் மொழியாம் தமிழ் உலகின் உயர் தனிச் செம்மொழி. இது உலகில் வேறெந்த இனத்துக் காவது தாய் மொழியாக இருந்திருந்தால் இத்தனை காலத்திற்குள் அது உலகப் பொது மொழி ஆகியிருக்கம் "

- பேரறிஞர் அண்ணா -

## நீளுலகை நிறுத்திடையா !

அறம்பொரு ளின்பம் வீடு
ஆதியாம் புருடார்த் தங்கள்
திறம்படப் பெற்று வாழ்வு
திகழவே வேண்டு மையா !

கலையொளிர் கணேசா நீயோ
கற்பக தருவே யையா
மலையதாய்த் தாங்கி யெம்மை
மகிழ்ச்சியி லாழ்த் திடையா !

சிந்தா மணிச் சுடரே!
சீரியும் ஐங் கரனே!
நந்தா விளக் கொளியாய்
நானிலத்தைக் காத்தி டையா!

புத்தம் புது மலராய்
பூதலத்தைப் புதுக்கி யொளி
நித்த மெமக் கீந்து
நீளுகை நிறுத் திடையா !

செத்தாரைச் சாவார் காவும்
சேதியை யறிந்தோ மையா !
சத்தாக வாழும் நாளின்
சகதியைப் போக்கி டையா !

## தூமணியே துலங்கவைப்பாய் !

எல்லோரும் எல்லாம் பெற்று
இல்லாதாரில்லை யென்ற
வல்ல சமு தாயம் சமைக்க
வழி வகுத்துத் தந்திடையா !

அன்பை யடி நாதமாக
அவனிதனில் எமக் களித்து
துன்பச் சுமை துணித்து
தூமணியே துலங்க வைப்பாய் !

**'பேசிய வார்த்தை, எய்த அம்பு, சென்ற**
**வாழ்வு அலட்சியப்படுத்திய சந்தர்ப்பம், இவை**
**திரும்பி வருவதில்லை ' 'முன்பின் யோசியாமல்**
**அவசரத்தில் வாக்குறிதி அளிக்கக்கூடாது.**
**ஒருமுறை அளித்த பின் உயிர்போவதாக**
**இருந்தாலும் அதை நிறைவேற்றியே தீரவேண்டும்'**

**– காந்திஜி–**

## ஏழிசையாய் இசைப்பயனாய் --

ஏழிசையாய் இசைப்பயனாய்
எழில் கொஞ்சும் பூரணனாய்
நாளெலாம் நமக் கருளும்
நவமூளாய்ப் பதி யழகா !
தாழ்விலா வாழ்வு பெற்று
தாரணியில் நாம் வாழ்
சூழும்தீ வினை களைந்து
சுந்தரத்தைத் தந் திடையா !

**'தற்திருப்தி கற்றலின் எதிரியாகும்**
**எம்மைத் தற்திருப்தியிலிருந்து விடு**
**வித்துக் கொள்ளும் வரை எதையும்**
**உண்மையாகக் கற்கமுடியாது.**
**எம்மைக் குறித்து எமது கண்ணோட்டம்**
**'கற்பதில் திருப்தியே அடையாதிருப்ப' தாகவும்,**
**பிறரைக் குறித்து எமது கண்ணோட்டம்**
**'கற்பதில் களையாதிருப்ப' தாகவும் இருக்க வேண்டும்'**

-ஓர் அறிஞன்-

## மலையாகக் காக்குதையா!

அலை பாயு முள்ளத்தில்
நிலை குலையா வுன்னெண்ணம்
சிலையாக நின் றெம்மை
மலையாகக் காக்கு தையா

தொப்பை யப்பன் தம்மை
தோப்புக் கரணம் போட்டு
தப்பின்றி வழுத்தி வர
தாங்கித் தக வீவான் !

**ஒரு பொல்லாப்பும் இல்லை**
**யாமறியோம்.**
**எப்பவோ முடிந்த காரியம்**
**முழுவதும் உண்மை.**

**–தவத்திருயோகர் சுவாமிகள்–**

## மடைதிறந்து அன்புலகில் நீளவேண்டும் !

தடையுடைத்துத் தகவுலகில் வாழவேண்டும் !
தரணிதமைத் தருமநெறி ஆளவேண்டும் !
மடைதிறந்து அன்புலகில் நீளவேண்டும் !
மகிழ்வுலகை என்றென்றும் சூழவேண்டும் !

உழுபவரின் உடலுறுதி உயரவேண்டும் !
உண்மையினை உலகமது உணரவேண்டும் !
பழுதறுக்கும் ஐங்கரனைப் பரவவேண்டும் !
பண்புடனே அவன் வழியைப் பற்றவேண்டும் !

இதயத்தில் நல்லுணர்வு பொங்கவேண்டும் !
ஈரமற்றோர் நெஞ்சங்கள் துஞ்சவேண்டும் !
பதமாகப் பண்பாடு தங்கவேண்டும் !
பாரினிலே பல்கலையு மோங்கவேண்டும் !

**"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் –அன்புடையார்**
**என்பும் உரியர் பிறர்க்கு"**

**- வள்ளுவப் பெருந்தகை-**

## மருவிப் பேரின்பம் தாராய் !

வீதியெங்கும் விழாக் கோலம்
விண்ணதிரும் நாத மழை
மோதிடும் நல் லடியார்கள்
முகிழ்ந்து வரும் தோத்திரங்கள்
வேதியரி னோது தல்கள்
விளங்குமுயர் ஆகமங்கள்
நாதியற்றோர் நாடி வர
நந்திமகன் நல மீவான் !

கோதிலாக் குணத்தின் குன்றாய்
குறைவிலா ஆழி முத்தாய்
தீதிலா வாய்மை காக்கும்
திருமறை வகுத்த கோவாய்
பூதல வாழ்வை யென்றும்
பொன்னக ராக்கி நாளும்
மாதொரு பாகன் மைந்தா !
மருவிப்பே ரின்பம் தாராய் !

**"மண்டியிட்டு வாழ்வதைவிட,**
**நிமிர்ந்து நின்று சாவது மேல்."**

–சே குவெரா–

# ஈகை இலங்கிட நின்றிடுவாய் !

சித்தி விநாயகா வந்திடுவாய் -என்றும்
சீரைச் சிறப்புடன் தந்திடுவாய் !
இத்தரை நித்தமும் ஓங்கிடவே-பாரில்
ஈகை இலங்கிட நின்றிடுவாய் !

வாழ்வு வழங்கிட வந்திடுவாய்-அதில்
வனப்பு மிகுந்திடத் தந்திடுவாய் !
தாழ்வு அழித்திட வந்திடுவாய்-என்றும்
தரணி தழைத்திடத் தந்திடுவாய் !

காரிருள் நீக்கிட வந்திடுவாய்- நின்று
கவலை களைந்திட வந்திடுவாய் !
கூர்மதி யூக்கிட வந்திடுவாய்-நாட்டின்
கூனல் நிமிர்த்திட வந்திடுவாய் !

வையம் வனப்புற வந்திடுவாய் - நிதம்
வாய்மை வலுப்பெறத் தந்திடுவாய் !
செய்தொழி லோங்கி வளர்ந்திடவே-பாரில்
செழுமை சிறப்புறத் தந்திடுவாய் !

அன்பு கொழித்திட வந்திடுவாய்-அதில்
அமைதி செழித்திடத் தந்திடுவாய் !
துன்பு துடைத்திட வந்திடுவாய் -என்றும்
தூய்மை துலக்கியே நின்றிடுவாய் !

## நவசக்தி ஈந்திடப்பா !

அருளீயும் ஐங்கரனே !
ஆனைமுக அற்புதனே !
மருளகற்றி மாதலத்தை
மாட்சியுட னாட்சி செய்வாய் !

மூளாய் முறு வலிக்க
முக்கண்ணன் மூத் தவனாய்
வேழமுகம் கொண் டவனே !
வேதனைகள் வெட்டிடப்பா !

சிந்தா மணி யென்னும்
சிறப்பொளிரும் சீர்த் திகனே !
நந்தா விளக் கொளியாய்
நாநிலத்தைக் காத்திடப்பா !

அத்தன் தலை மகனே !
ஐந்து கர அறச்சுடரே !
சித்தம் சிறந் தொளிரும்
சீர்த்திதமைத் தந்தி டப்பா !

காலத்தா லழி யாத
கற்பகமாய் நீ யிருந்து
ஞாலத்துக் கென் றென்றும்
நவசக்தி யீந்திடப்பா !

## உள்ளம் உயர்த்திட வந்திடப்பா!

வித்தகா ! விநாயகா ! வந்திடப்பா !-என்றும்
வீறு விளங்கிட வந்திடப்பா !
சத்தான வாழ்வு சமைத்திடவே-பாரில்
சாதனை செய்திட வந்திடப்பா !

செய்தொழி லூக்கிட வந்திடப்பா —நாட்டில்
செழுமை செழித்திட வந்திடப்பா !
வையம் வனப்புற வந்திடப்பா !-உள
வலிமை வலுப்பெற வந்திடப்பா !

உள்ளம் உயர்த்திட வந்திடப்பா —அதில்
உண்மை உரைத்திட வந்திடப்பா !
கள்ளம் கரைத்திட வந்திடப்பா ! —என்றும்
கயமை கலைத்திட வந்திடப்பா !

பல்கலை யூக்கிட வந்திடப்பா —பாரில்
பண்பு வளர்த்திட வந்திடப்பா !
வல்லமை யோங்கி வளம் பெறவே-நாட்டில்
வனப்பு வளர்த்திட வந்திடப்பா !

சத்தியம் காத்திட வந்திடப்பா — என்றும்
சமத்துவம் சமைத்திட வந்திடப்பா !
இத்தல மென்று மிலங்கிடவே-நாட்டில்
ஈகை யிலங்கிடச் செய்திடப்பா !

## திவ்வியத்தைத் தந்திடையா !

எண்ணக் கரு வதன்மேல்
எழிலான வுன் கோயில்
வண்ணச் சுட ரொளியாய்
வளமீந்து நிற்கு தையா !

பாரோம்பும் பக்கு வத்தை
பாங்காக வே யுணர்த்தி
சீரோம்பும் சீர்த்தி தனை
சித்தத்தில் வைத்தி டையா !

கல்விக் கடல் நீந்தி
காசினி யையே யுயர்த்த
எல்லை கடந் தெமக்கு
ஏற்றமளித் திடையா !

புகழ் பூத்த மூளாயில்
புன்மை தமைக் களைந்து
திகழ்ந்து மணம் கமழும்
திவ்வியத்தைத் தந்திடையா !

மனிதம் மலர்ந்து நிதம்
மாதலத் தையே புரக்க
புனிதம் பொலிந் துலகை
பூம்பொழிலா யாக் கட்டும்

மூளா யெனும் பதியில்
முகிழ்ந்து வரும் கருணை நிதம்
வேழ முகத் தோனால்
வேட்கை தமை யீயுமையா !

## நஞ்சுணி மைந்தா உந்தன்---!

நல்லரு ளீந்து நிற்கும்
    நஞ்சுணி மைந்தா வுந்தன்
எல்லையில் லாது நீளும்
    எழிலுறு கருணை பொங்க
வல்லமை தந்து, என்றும்
    வாழவே வழி தெருட்டி
தொல்லைகள் துடைத்து எம்மை
    துலங்கிட வைத்திடையா !

அலையெனவே யருள் சுரந்து
    அமர்ந் திருக்கு மைங்கரனே!
கலையுமிழு முன் னுருவம்
    காசினி தனையே யீர்த்து
மலையான மகிழ் வதனை
    மாதலத் துக் கீபவனே !
நிலையான நிம் மதியை
    நீளுலகுக் கீந் திடையா !

**"உனக்காக நீ செய்வது**
**உன்னுடனேயே போய்விடும்.**
**மற்றோருக்காய் நீ செய்வது**
**உன் வரலாறாய் நிலைத்திருக்கும்."**

–காலு டுவேக்கே காலு–

## தேக்க நிலை நீக்கிடப்பா !

அன்பினா லுலகை யாளும்
    ஆனைமுக ஐங் கரனே !
துன்பு துடைத் துலகில்
    தூய்மை துலக் கிடப்பா !

தெய்வ மணம் கமழும்
    திகழ்மூளாய்ப் பதி யதனில்
உய்ய வழி சமைக்கும்
    உத்தமத்தின் தத்துவனே !

எந்தையா யிருந் தெம்மை
    எழிலாகக் காத்தி டப்பா !
சிந்தை தெளிந் திடவே
    சீர்மை யினைத் தந்திடப்பா !

கடமையே கடவு ளென்ற
    கருத்தினைக் கனலாய் மூட்டி
மடமையினை மா தலத்தில்
    மரித்திடவே செய் திடப்பா !

நாடித் தவம் புரிந்து
    நாளு முனைத் துதிக்க
தேடித் தரு மருளால்
    தேக்கநிலை நீக்கி டப்பா !

## சீத்துவமாய்த் தந்திடையா !

என்றென்றும் உன் பதத்தை
    ஏற்றித் துதிப் பவர்க்கு
குன்றாக நின் றுலகில்
    குணமீயும் குல மகனே !
குன்றாடி பெற் றெடுத்த
    குணவானே! குமுத சகாயனே !
என்றென்றும் நின் றுலகை
    ஏற்றமுடன் வாழ வைப்பாய் !

சத்தம் எதுவு மின்றி
    சஞ்சலங்கள் தீர்த்து வைக்கும்
சித்தி விநா யகனே !
    சீரியும் ஐங் கரனே !
நித்தம் உனைப் பரவ
    நீளுலகில் நின் மதியை
சித்தம் சிலிர்த் திடவே
    சீத்துவமாய்த் தந்தி டையா !

**"ஒரு மனிதனுக்கு புரிகிற மொழியில்
நீ பேசும்போது அது அவனது
மூளையைச் சென்றடைகிறது.
ஆனால் அவனது சொந்த மொழியிலேயே
பேசும்போது இதயத்தினை சென்றடைகிறது."**

**-நெல்சன் மண்டேலா-**

## புதுக்கிடும் புனிதம் கண்டேன் !

வாரண முகத்தோன் தம்மால்
வழங்கிடும் வளத்தைக் கண்டேன்!
தாரணி தனையே தாங்கி
தளிர்த்திடும் தகவு கண்டேன் !
பூரண வாழ்வு தம்மைப்
புதுக்கிடும் புனிதம் கண்டேன் !
காரணன் கழலை நாடி
களித்திடும் கனிவு கண்டேன் !

வாழும் வகை தெருட்டி
வற்றாத நீ ரூற்றாய்
சூழும்தீ வினை களைந்து
சூட்சுமத்தை யாட்சி செய்து
நாளு மெமை யாளும்
நந்திமகன் நல் லருளால்
பாழும் படு துயர்கள்
பாரைவிட்டே பறந்து விடும் !

**"தடைகள் பயங்கரமாய் தோன்றும்,**
**நீ உன் பார்வையை**
**நோக்கத்திலிருந்து விலக்கும்போது."**

**-ஹென்றி (f)போர்ட்-**

## நனிசிறந்தோங்க வைப்பாய் !

வலம்புரி விநாய கரே !
வளமீயும் வசீகரரே !
குலம்வாழக் குண மீந்து
குவலயத்தை வாழ வைப்பாய் !

காலச் சுழற் சியிலே
கணபதியே! களித் தென்றும்
கோலத் திரு வுருவால்
கொள்கை தமைச் சமைப்பாய் !

கற்பனை கடந்து நிற்கும்
கரிமுகன் கருணை பொங்க
நற்பதம் நாடு கின்றோம்
நனிசிறந் தோங்க வைப்பாய் !

பொற்பதம் போற்றி யென்றும்
பொலிவுடன் உனை வழுத்த
சொற்பதம் தந்தி டப்பா !
சோர்வதைப் போக்கி டப்பா !

அருளீயு மரு மருந்தே !
ஆனை முக ஐங்கரனே !
இருளகற்றி இவ் வுலகை
இசைவுடனே வாழ வைப்பாய் !

## இனிமையினை ஈந்திடப்பா !

மூஷிக வா கனனே !
முக்கண்ணன் மூத்தவனே !
தேசிகத் திகழ் மகனே !
தெளிவதனைத் தந்திடப்பா !

வானும் வளர் பிறையும்
வற்றாத நீ ரூற்றும்
தேனா யினித் திடவே
தெவிட்டாது தந்திடப்பா !

கூழைக் குடித் தாலும்
குணமாக வாழ்ந் தாலும்
நாளைப் பொழு ததனை
நனிசிறக்க வைத்திடப்பா !

கன்னல் மொழி சுரந்து
கலை யாளும் கற்பகனே !
இன்னல் தமைக் களைந்து
இனிமையினை யீந்தி டப்பா !

**"ஒரு மனிதனின் குணத்தை**
**அறிந்து கொள்வது,**
**தனக்குச் சமமானவர்களை அல்ல.**
**தன்னிலும் கீழானவனை எப்படி**
**நடத்துகின்றான் என்பதை பார்த்தே."**

**-J.K. றௌலிங்-**

## நீதம் நிலை பெறத் தந்திடையா !

மூளாய் முதல்வனே வந்திடப்பா —என்றும்
மூலக் கருப்பொருள் தந்திடப்பா !
வாழும் வகையினைச் செப்பிடப்பா —நின்று
வறுமை நிலை தமைப் போக்கிடப்பா !

உள்ளம் உயர்த்திட வந்திடப்பா —நாளும்
ஊனம் உலுக்கிட வந்திடப்பா !
பள்ளம் பரவிட வந்திடப்பா —நாட்டில்
பசுமை பரப்பிட வந்திடப்பா !

கொள்ளை யின்பந்தர வந்திடப்பா !-என்றும்
கூனல் நிமிர்ந்திட வந்திடப்பா !
சள்ளல் சரித்திட வந்திடப்பா —என்றும்
சாந்தம் சமைத்திட வந்திடப்பா !

அன்பு அளித்திட வந்திடப்பா —நிதம்
ஆளும் அருகதை தந்திடப்பா !
துன்பு துடைத்திட வந்திடப்பா —நாட்டில்
தூய்மை துலக்கிட வந்திடப்பா !

நீதி நிறுத்தவே வந்திடப்பா —என்றும்
நீதம் நிலை பெறத் தந்திடப்பா !
பாதம் பணிந்திடத் தந்திடப்பா — நாட்டில்
பாசம் பனித்திட வேண்டுமப்பா !

## கோலம் அளித்திடையா !

அஞ்சேல் என எமக்கு
　　அபயம் அளித் துலகில்
விஞ்சு மருள் சுரக்கும்
　　வீரத் திரு மகனே
நெஞ்சு நெகிழ்ந் திடவே
　　நேர்மை மிகுந் திடவே
கொஞ்சு மொழி யதனால்
　　கோல மளித் திடையா !

களங் கண்டு காசினியை
　　காலமெலாம் காத் தருள
வளமீயும் வனப் பதனை
　　வற்றாது அளித் துலகை
தளமாகக் கொண் டருளி
　　தாங்கித் தகவீந்து, ஞானப்
பழமாக நின் றென்றும்
　　நல்லாட்சி நல் கிடுவாய் !

**"ஒரு கலாசாரத்தை சிரழிக்க, நீ புத்தகங்களை அழித்து விடத்தேவையில்லை. அந்த மக்களை அப்புத்தகங்களை வாசிக்காமல் செய்தாலே போதும்."**

–ரே (B)பிராட்பறி–

## வளமீயும் வாரணனே !

துங்கக் கரி முகனே !
தூய மணிச் சுடரே !
பங்கமிலா வாழ்வதனில்
பக்குவத்தைத் தந் திடையா !

கள்ளம் கரைந் தோட
காசினியைக் காத்து நிதம்
அள்ளித் தரு மருளால்
ஆனந்த மீந் திடையா !

சத்தம் எதுவு மின்றி
சத்தியத்தைக் காத் துலகில்
சித்தம் சிறப் புறவே
சீர்த்தியினைத் தந்தி டையா !

வாழ்வு வளம் பெறவே
வளமீயும் வா ரணனே !
தாழ்வு தகர்த் தழிக்கும்
தகுதியினைத் தந் திடையா !

எல்லையே என் றுனக்கு
எதுவுமே யிலை யுலகில்
வல்லமை தனையே தந்து
வழுத்திட வைத் திடையா !

## கூனல் நிமிரட்டும் !

வேழ முகத் தோனால்
விக்கி னங்கள் தீரட்டும் !
பேழை வயிற் றோனால்
பெட்பெம்மை யா ளட்டும் !

வானம் பொழி யட்டும் !
வையம் மகி ழட்டும் !
கூனல் நிமி ரட்டும் !
கொள்கை விரி யட்டும் !

காலம் கனி யட்டும் !
கடமை நிதம் நீளட்டும் !
கோலம் கொழிக் கட்டும்
கொடுமை நீ றாகட்டும் !

சீலம் செழிக் கட்டும் !
சிந்தை தெளி யட்டும் !
ஞாலம் மகி ழட்டும் !
ஞானம் சுரக் கட்டும் !

தங்கக் கரி முகனே !
தலை காக்கும் தத்துவனே !
மங்காப் புகழ் சுரந்து
மாதலத்தை மகிழ வைப்பாய் !

## கலை ஞானக் கருவுருவே !

நீளுலகில் நித்திலமாய் !
நித்தியமாய் நீ யிருந்து
நாளெல்லாம் நல் லருளை
நானிலத்துக் கீந் திடப்பா !

முகிழ்ந் தொழிரும் மூளாயில்
முனைப்புடனே பள்ளி கொண்டு
நெகிழ்ந் தருளும் கருணையினை
நீளுலகில் நிறுவிடப்பா !

எண்ணி லடங் காது
ஏதம் களை பவனே !
மண்ணை மலர வைக்கும்
மகத்துவத்தைத் தந்தி டப்பா !
கலைஞானக் கருவுருவே !
காசினியின் கலை யொளியே !
தலையாக நின் றெமக்கு
தருமநெறி தந்தி டப்பா !

நிலையில்லா வாழ் வெனினும்
நீதி நெறி வழுவாது
தலை நிமிர்ந்து தாரணியில்
தகவுடனே வாழ வைப்பாய் !

## வள்ளலுனை வழுத்துகிறோம் !

நல்ல மணி மூளாய்
நாத மெழுப் பிடவே
தில்லைத் திருக் கூத்தன்
திருக்குமரன் திகழ்ந் தென்றும்
அல்லல் அறுத் தெம்மை
ஆடிக் களிக்க வைத்து
பொல்லா வினைகள் தமை
போக்கிடவே வந் திடப்பா !

துள்ளிவந்து துயர் துடைக்கும்
துங்கக் கரி முகனே !
கொள்ளை யின்ப மீந்தென்றும்
குவலயத்தைக் காத்திடப்பா !
தெள்ளுதமிழ் பொங்கி நிதம்
திகழவழி காட் டிடுவாய் !
வள்ளலுனை வழுத்து கிறோம்
வறுமை நிலை போக்கிடப்பா !

**"உன்னிடத்தில் நீ அன்பு கூருவதுபோல்
பிறரிடத்திலும் அன்பு கூருவாயாக"**

**-இயேசுபிரான்-**

## கேண்மை கொழிக்கிறது !

குணமீந்து குலம் காக்கும்
குமுத சகாயனே நீ !
கணமெலா மெம் மினத்தை
காசினியில் வாழ வைப்பாய் !

மூளா யெனும் போது
மூச்சே யினிக் கிறது !
கேளா யுன் னருளால்
கேண்மை கொழிக்கிறது !

ஓங்கு மொழி வளர்க்கும்
ஓங்கார தத்துவனே !
தாங்கி யெமைக் காத்து
தருமம் தனை வளர்ப்பாய் !

**"மிகையாக நடிக்கும் முறையை நீங்கள் தவிர்க்க வேண்டுமென்று விரும்புகின்றேன். இதற்காக உணர்ச்சியே இல்லாமல் உயிரற்று இருந்துவிடாதீர்கள். வசனத்துக்குத் தகுந்த நடிப்பையும் நடிப்பிற்குத் தகுந்த வசனத்தையும் கையாளுங்கள். முற்காலத்திலும் இக்காலத்திலும் இயற்கையைக் கண்ணாடிபோல எதிரொலிப்பதுதான் எழில்மிக்க நடிப்பின் குறிக்கோளாகும்"**

**–மகாகவி வில்லியம் சேக்ஸ்பியர்–**

## சஞ்சலங்கள் துஞ்சி விடும்

கரி முகனின் தாழ் பணிய
சஞ்சலங்கள் துஞ்சி விடும்
பிரணவப் பொரு ளுணர்ந்து
பிறவிப் பயனடைவோம்

கன்னித் தமிழ் ஞான
கணபதியே கலை மதியே !
பின்னிப் பிணைந் தெமக்கு
பேராற்றல் தந்திடையா !

வாழும் வகை தெருட்டும்
வண்மை மிகு திண்ணியனே !
சூழும்தீ வினை களைந்து
சுந்த ரத்தைத் தந்திடையா !

**மாசற்ற மனிதநேயம் நபிகள் நாயகம் (ஸல்) நவின்றார்கள்.**
**“எல்லா மக்களும் இறைவன் படைப்புக்களே! அவர்களுக்கிடையில் எக்காரணம் கொண்டும் வேற்றுமை காட்டாமல் அனைவருக்கும் நன்மையே செய்யுங்கள். தனது படைப்புக்களில் இறைவனுக்கு மிகவும் பிரியமானவர்கள் அவன் படைப்புக்களுக்கு நன்மை செய்யும் நன்மக்களே”**

**–நூல் பைஹகி–**

## வளமீயும் பக்தியலை !

தேனூறும் மூ ளாயில்
தெவிட்டாத நாத மழை
வானுயர்ந்த கோபு ரத்துள்
வளமீயும் பக்தி யலை !

கடைக் கண்ணின் பார்வையிலே
கருனை மழை பொழியட்டும் !
தடைக் கல்வாய் நிற்பவைகள்
தவிடு பொடி யாகட்டும் !

மூலவனின் தாழ் பணிய
மூழ்கு மிருள் களைவான்
காலமெலாம் காத் தெம்மை
காசினியில் வாழ வைப்பான் !



## தெவிட்டாத சொல்லுழவன் !

பேசு பொரு ளாக
 பெருக் கெடுத் தோடுகின்ற
தேசு முக வழகன்
 தேவிட்டாத சொல்லுழவன்
மாசு மரித் துலகு
 மகிழ்ச்சிக் கடல் நீந்த
வீசு மருள் சுரந்து
 விஞ்சு மகிழ் வீவான் !

### ஈசனுவக்கும் இன் மலர் மூன்று

வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அழயிணைக்கு வாய்த்த மலரெதுவோ ?
வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமழ உத்தமனார் வேண்டுவது

காப்பவிழ்ந்த தாமரையோ கழுநீர் மலர்ந்தொடையோ
மாப்பிளையாய் வந்தவர்க்கு வாய்த்த மலரெதுவோ?
காப்பவிழ்ந்த மலருமல்ல கழுநீர்த் தொடையுமல்ல
கூப்பியகைக் காந்தளழ கோமகனார் வேண்டுவது

பாட்டளிசேர் பொற்கொன்றையோ பாரிவில்லாக் கற்பகமோ
வாட்ட முறாதவர்க்கு வாய்த்த மலரெதுவோ ?
பாட்டளிசேர் கொன்றையல்லப் பாரிவில்லாப் பூவுமல்ல
நாட்ட விழி நெய்தலழ நாயகனார் வேண்டுவது

காரைதீவு – முத்தமிழ் வித்தகர்
–விபுலானந்த அழகளார்–

## அறிவைப் பெருக்கிடையா !

திக்கெட்டும் ஒளி யூட்டும்
திருத்தலத்தி லென் றென்றும்
விக்கினங்கள் தீர்த் தெமக்கு
விளங்கு மருளீந்திடுவாய் !

அல்ல லறுத் தென்றும்
அறம் வளர்க்கும் பாதையிலே
நல்லவை செய்து நிதம்
நாநி லத்தைக் காத்திடுவாய் !

கருமை யெனு மிருளை
காசினியிலே யிருந்து
பெருமையுடனே யழித்து
பேரின்ப மீந்திடுவாய் !

இன்பத் திரு நாளில்
இதய மலர் பூக்க
அன்பினா லெமை யாண்டு
அறிவைப் பெருக்கிடப்பா !

## பகைமை பறித்திட வந்தனனே !

வந்தனன் ஐங்கரன் வந்தனனே!-எம்
வையத்தை வாழ்விக்க வந்தனனே !
சிந்தை சிறப்புற வந்தனனே !-என்றும்
சிறுமை சிதைத்திட வந்தனனே !

சமத்துவ மோங்கிட வந்தனனே !-பாழும்
சாதிகள் போக்கிட வந்தனனே !
கமழ்ந்தெழில் பூத்துக் குலுங்கிடவே
கயமை களைந்திட வந்தனனே !

வீரம் விளக்கிட வந்தனனே – அதில்
விவேகம் விதைத்திட வந்தனனே !
பாரம் இறக்கிட வந்தனனே!- மனப்
பகைமை பறித்திட வந்தனனே !

செய்தொழி லூக்கிட வந்தனனே !-இனம்
சேர்ந்து சிறப்புற வந்தனனே !
மைவிழி மாதர் மகிழ்ந்திடவே !-நல்ல
மாண்பை வளர்த்திட வந்தனனே !

சுதந்திர தாகம் சுடர் விடவே –வல்ல
சூட்சும மீந்திட வந்தனனே !
இதம்பெறு வாழ்வி னடித்தளமாய் -என்றும்
ஈகை இலங்கிட வந்தனனே !

## வழித்துணையாய் வந்திடப்பா !

பாடிப் பணிந் துன்னை
பக்த ரெலாம் நாடுகின்றார்
தேடித் திருப் பதத்தின்
திவ்வியத்தைத் தேடு கின்றார் !

ஓடி வருவோர்க்கு
உன்ன தத்தைத் தந்திடப்பா !
பாடிப் பணி வோர்க்கு
பக்குவத்தை யீந் திடப்பா !

பிள்ளையா ரப்பா உந்தன்
பேராற்றல் தமைப் பரப்பி
வள்ளலா யிருந் தெமக்கு
வுழித் துணையாய் வந்திடப்பா !

திரும்பு மிட மெல்லாம்
திகழ் கின்ற விநாயகனே !
அரும்பி வரு மருளால்
அகிலமதை ஆட்டி டப்பா !

ஆட்டி வைக்கும் ஐங்கரனால்
ஆடு கின்ற அகிலமது
வீட்டி லிடம் பிடிக்க
விச்சை தனைத் தந்திடப்பா !

அத்த னரு மருந்தே !
அகல் விளக்கே! ஐங்கரனே !
நித்த முனைப் பாடும்
வித்துவத்தைத் தந்திடப்பா !

## உயர்வினைக் கண்டோமையா !

காலைக் கதிர வனாய்
களமாடி யெமை யாளும்
மூலப் பிரணவன் தாழ்
மூழ்கிஅருள் பெறுவோம் !

அள்ளி யணைத் தெமக்கு
ஆறுதலை யீயு முனை
துள்ளித் துதித் தென்றும்
தூய வொளி பெறுவோம் !

உலகினை யாளு முந்தன்
உன்னதம் கண்டோமையா !
பலமெலா மீந் தெமக்கு
பக்குவத்தைத் தந்தி டையா !

கல்லையும் கரைய வைக்கும்
கருணையைக் கண்டோமையா !
எல்லை யில்லாத ஞானம்
என்றுமே தந் திடையா !



## பாலைப் பழிக்குமுந்தன் பக்குவம் கண்டோமையா !

பாலைப் பழிக்கு முந்தன்
பக்குவம் கண்டோமையா !
காலைக் கதிரவனாய்
கருணை நிதம் தந்திடையா !

உள்ளக் கமல மதில்
உறைந்திருக்கு முத்தமனே !
பள்ள மதில் வீழாமல்
பாரினையே காத் திடையா !

சொற் பதத்தால் நாமுன்னை
சொக்கித் துதிக் கின்றோம்
நற்பதத்தை யீந் தெம்மை
நானிலத்தில் காத் திடையா !

நாளெலா முன் பதத்தை
நாடித் துதிக் கின்றோம்
தாழ்விலா வாழ்வு பெறும்
தகுதியினைத் தந்திடையா !



# நீயின்றி வேறுளரோ ?

குமுத சகாய னென்றும்
குலம் தழைக்க வழி சமைப்பான் !
அமுத நிலை யோங் குதற்கு
ஆழத் தடம் பதிப்பான் !

நீளுலகைக் காப் பதற்கு
நீயின்றி வே றுளரோ
தாழ்வின்றித் தாங்கு தற்கு
தாரணிக்குத் தகை யுண்டோ ?

செல்லுமிட மெல்லாம்
செப்பனிடு முன் னாற்றல்
கல்லி யெடுத் துலகில்
கருணை தமை யீயாயோ ?

மனக்கோயில் தமைத் திறந்து
மாதலத்தில் மலர்ந்தி டையா !
கனலெல்லாம் கனன் றழிய
காசினியைக் காத் திடையா !


நாடோடி யா யலையும்
நானிலத்தைக் காத் திடையா !
தேடியுனை நாடு வோரை
தென்றலதா யீர்த் திடையா !



## செதுக்கிடுவாய் உன்னுளத்தை !

மெய்யன்பின் மேன்மை யினை
    மேதினிக் கே யுணர்த்தி
கைமேல் பல னீயும்
    கருணை தரும் கற்பகனே !
வையம் வளர்ந் தொளிர
    வறுமை நிலை நீக்கி நிதம்
செய்தொழிலைச் செப்ப னிட
    செதுக்கிடுவாய் யுன் னுளத்தை !

தத்துவத்தின் தனிச் சுடராய்
    தாங்கியெமைக் காத் தருளும்
வித்தகனே ! விநாயகனே !
    வீரத்தின் விளை நிலமே !
பக்தியுடன் பரவு கிறோம்
    பனித் தென்றும் பாரோம்பி
சித்தியுட னெமை நடாத்தி
    சிறப்பதனை யீந் திடையா !




## தலைவனிடம் விட்டுவிடு

அப்பா ! அரு ளாளா !
ஆனந்தப் பெரு நிதியே !
தப்பாம லென் றென்றும்
தாங்கித் தக வீவாய் !

நிலையிலா வாழ் வதனை
நிரந்தர மென் றெண்ணாதே !
தலை காக்கும் தத்துவத்தை
தலைவனிடம் விட்டு விடு !

கல்லி உல காளும்
காரணனே ! கரி முகனே !
தொல்லை துடைத் தென்றும்
தூயவழி துலக்கிடையா !

எண்ணித் துணிந் துலகில்
எடுக்கின்ற முடி வதனால்
கண்ணில் கரு மணியாய்
காலமெலாம் காத்திடையா !



## தூக்கி நிறுத்திடப்பா !

காலாதி கால மெலாம்
கருணை மழை பொழியும்
மூலப் பிரணவன் தாழ்
மூழ்க முழுமை பெறும்

காரணனின் கா ரணியாய்
களமாடி யெமை யாளும்
பூரணனின் தாள் பணிந்து
பூதலத்தைப் புதுக்கிடுவோம் !

ஐயா எம் ஐங்கரனே !
ஆனந்த மெய்ப் பொருளே !
தொய்யாமல் துவளாமல்
தூக்கி நிறுத்திடப்பா !
என்றென்று முன் னடியில்
எழிலாக நாமிருக்க
குன்றாக நின்றெம்மை
குணமாகக் காத்திடப்பா !

**உனக்கு மன அமைதி வேண்டுமானால்,**
**யாருடைய குறையையும் காணாதே!**

~ சுவாமி விவேகானந்தர் ~

சுபம்



## [illegible] [illegible] !

[illegible]
[illegible]
[illegible]
[illegible]


[illegible]
[illegible]
[illegible]
[illegible] !

[illegible] !
[illegible] !
[illegible]
[illegible] !
[illegible]
[illegible]
[illegible]
[illegible] !

[illegible],
[illegible]

— [illegible]

— கவிஞரின் —



— கலைத்துவம் —

சாய்ராம் பிறிண்டேர்ஸ், சங்கானை, T.P 077 6915339